மலர்-2 இதழ்-34 ஜனவரி 16-31 2018 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

மெயில் புக்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

உலக வரலாற்றில் முதன்முறையாக இமெயிலில் வெளிவரும் புத்தகம்



## தொழில் பங்குதாரராக முருகனை சேர்க்கும் பக்தர்கள்

ஒவ்வொருவரின் இமெயில் முகவரியை தேடி வரும்

# தோஷங்களையும், துயரங்களையும் விரட்டும் துளசிச் செடி

துளசி சகல தோஷங்களையும், துயரங்களையும் விரட்டும் வல்லமை வாய்ந்தது. புராணங்களும் ஞானநூல்கள் பலவும் இதன் மகிமைகள் குறித்து விவரிக்கின்றன.

இந்த உலகில் ஓரிடத்தில் வகை வகையாக மலர்ச் செடிகள் செழித்து வளர்ந்திருந்தாலும் அங்கு துளசிச் செடி இல்லையெனில், அந்த இடத்தை நந்தவனமாக ஏற்க இயலாது. துளசி படர்ந்த இடத்தை ‘பிருந்தாவனம்’ என்பர். துளசிக்கு ‘பிருந்தா’ என்றும் ஒரு திருப்பெயர் உண்டு.

வாழ்நாளின் அந்திமத்தில் துளசி தீர்த்தம் உட்கொள்பவர், மகா விஷ்ணுவுடன் ஐக்கியமாகி விடுவார்கள் என்பது நம்பிக்கை.

பூஜைக்காக துளசியைப் பறிக்கும்போது, அதிகாலை வேளையி லும், விரல் நகம் படாமல் விஷ்ணுவின் பெயரை உச்சரித்தவாறும் துளசியைப் பறிப்பதே முறை. துளசியைப் பறித்து மூன்று நாட்கள் வரை உபயோகப் படுத்தலாம். தனித்தனி இலையாகப் பறிக்காமல் நான்கு இதழ், ஆறு இதழ்களாகப் பறிக்கலாம்.

முன்னோர் திதிநாள், விரத நாள், தெய்வப் பிரதிஷ்டை தினம், மகா விஷ்ணுவை வழிபடும் வேளை, தானம் கொடுக்கும் நேரங்களில் துளசியை உபயோகிப்பதால், பன்மடங்கு பலன் கிடைக்கும்.

சங்கு, துளசி, சாளக் கிராமம் மூன்றையும் ஒரே இடத்தில் பூஜை செய்பவர்களுக்கு, முக்காலத்தையும் உணரும் சக்தி ஏற்படும் என்பது சாஸ்திரக் கருத்து.

ஒரு துளசி தளத்தில் 33 கோடி தேவர்களும், பன்னிரு சூரியர்களும், அஷ்ட வசுக்களும், அஸ்வினி தேவர்களும் வசிக்கின்றனர். அதன் நுனிப்பகுதியில் பிரம்மனும், நடுவில் மகாவிஷ்ணுவும், லட்சுமி, சரஸ்வதி, காயத்ரீ, பார்வதி ஆகியோரும் வசிக்கின்றனர்.

துளசியை வளர்த்து வழிபடுபவதால் ஆயுள் பலம், புகழ், செல்வம், குழந்தைப்பேறு ஆகியன கிட்டும். துளசி காஷ்டம் என்ற மணிமாலையைக் கழுத்தில் அணிபவர்களுக்கு பிரம்மஹத்தி தோஷம் விலகும்; மற்ற பாபங்களும் அகன்று விடும்.

எந்த இடத்தில் துளசிச் செடி உள்ளதோ அங்கே அகால மரணம் ஏற்படாது. துளசியை பூஜை செய்து வந்ததன் பலனாகவே சீதாதேவி ராமபிரானைக் கணவராக அடைந்ததாக துளசி ராமாயணம் கூறுகிறது.

சிலர், கருந்துளசியைப் பயன்படுத்தக் கூடாது என்பார்கள். இது தவறு. கருந்துளசிக்குக் ‘கிருஷ்ண துளசி’ என்ற பெயர் உண்டு. இதை, கிருஷ்ணருக்கு மட்டுமல்ல, எல்லா தெய்வங்களுக்குமே பயன் படுத்தலாம்.



விநாயகர், சக்திதேவி, சிவனுக்குப் போடாமல் தவிர்க்கலாம். பச்சையும், சிறிது வெண்மையும் கலந்ததே வெண் துளசி. இதை ராமபிரானுக்கும் அனுமனுக்கும் சூட்டலாம். இவை தவிர, செந்துளசி என்றும் வகையும் அரிதாகக் கிடைக்கிறது.

அமாவாசை அன்று யாக்ஞ வல்கியரின் மனையாளான காத்தி யாயினி சக்தியை துளசியால் வழிபட்டால், பிரிந்த தம்பதியர் மீண்டும் இணையும் பாக்கியம் கிடைக்கும்.

www.aanmeegamalar.com





# ஒவ்வொரு கெட்ட குணமும் ஒவ்வொரு நோயை உருவாக்கும்...

மனிதர்களின் குணத்துக்கும் நோய்க்கும் பல்வேறு தொடர்பு இருக்கிறது என்பதை நமது சித்த விஞ்ஞானிகள் ஆதிகாலத்திலேயே கண்டுபிடித்ததன் விளைவாகத்தான், குழந்தைகளுக்கு நல்ல பழக்கத்தையும், நல்ல செயல்களையும் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று முன்னோர்கள் வரைமுறையை வகுத்து வாழ்ந்தனர்.

தண்ணீர் என்பது பொதுவாக இருந்தாலும், அடுப்பில் வைத்து சுட வைத்தால் அந்த தண்ணீர் சூடாக இருக்கும், அதே தண்ணீரை குளிர்சாதனப் பெட்டியில் வைத்து எடுத்தால் தண்ணீர் முழுவதும் ஜில் என்று குளிர்ச்சித்தன்மையை பெற்றிருக்கும்.

இதுபோன்றுதான் நமது மனமும், பிறக்கும் குழந்தைகள் அனைத்தும் ஒரே மாதிரியாகத்தான் பிறக்கும் ஆனால் அவர்களின் வயது மாற மாற அவர்கள் செய்யும் செயலால் குழந்தைகள் வேறுபடும்.

அந்த வகையில் மனிதன் செய்யும் செயல்கள் அந்த மனிதனின் உடலுக்கு நன்மையாகவும், சில செயல்கள் கேடாயும் அமையும் என்பது நம் முன்னோர்களின் கணிப்பு.

அந்தவழிமுறைப்படி நாம் செய்யும் சில கெட்ட செயல்களால் உருவாகும் நோய்களைப் பற்றி பார்ப்போம்.

அதிகமாக பெருமையும், கர்வமும் அடைபவர்களுக்கு இதய நோய் உருவாகும்.

அதேசமயம் கவலையும், துயரமும் அடையும் மனிதர்களுக்கு வயிறு சம்பந்தப்பட்ட நோய்கள் உருவாகும்.

துக்கமும், அழுகையும் இருக்கும் மனிதர்களுக்கு சுவாச நோய்கள் உருவாகும்.

பயமும், சந்தேகமும் கொள்ளும் மனிதர்கள் சிறுநீரகப் பிரச்சனை ஏற்பட்டு அவதிப்படுவார்கள்.

எரிச்சலும், கோபமும் அதிகமாக கல்லீரல் நோய்கள் உருவாகும்..

அமைதியும், மகிழ்ச்சியும் அனைத்து நோயையும் குணமாக்கும்..

சிந்தனைக்கு ஏற்பதான் நமது உடலில் உள்ள சுரப்பிகளின் வேலை நடைபெறுகின்றன..

சந்தோஷமாக இருந்தால் நல்ல ஜெல் சுரக்கும்.

இல்லையேல் அமிலம் போன்று சுரந்து உடல் கேடாகும்.

இதனால்தான் நமது சந்ததியினருக்கு நல்ல செயலைச் செய்ய கற்று கொடுப்பது ஒவ்வொரு தாய் தந்தையரின் கடமையாகும்.

பிள்ளைகளுக்கு சொத்து சுகத்தை மட்டும் சேர்த்து வைத்தால் போதாது, அவர்களின் உடல் ஆரோக்கியத்துக்கு மேற்கண்டவை போன்று நல்ல செயல்களையும் போதித்து வந்தால் பிள்ளைகளின் ஆரோக்கியம் பெருகுவதுடன் மகிழ்ச்சியுடன் அவர்கள் வாழ நாம் மிகப்பெரிய வழிகாட்டியாக விளங்குவோம்.

www.aanmeegamalar.com





## உலகம் தோன்றிய நாள்
## வேல் பிறந்த நாள்
## வள்ளியை மணந்த நாள்

# தைபூசத்தின் சிறப்பு

இந்து மதத்தில் கொண்டாடப்படும் பண்டிகைகளில் தைப்பூச விழா மிகவும் பிரசித்தி பெற்ற விழாவாகும். ஒவ்வொரு மாதத்தில் முப்பது நாட்களில் அமாவாசை, பௌர்ணமி நாட்கள் சிறப்பு வாய்ந்தவை. இதில் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி ஒரு குறிப்பிட்ட நட்சத்திரத்திலேயே வரும். உதாரணமாக,

சித்திரை சித்ரா பௌர்ணமி, வைகாசி விசாகம், ஆனி கேட்டை, ஆடி உத்திராடம், ஆவணி அவிட்டம், புரட்டாசி பூரட்டாதி, ஐப்பசி அசுவினி, கார்த்திகை கார்த்திகை, மார்கழி திருவாதிரை, தைபூசம், மாசி மகம், பங்குனி உத்தரம்.

இந்த நாட்களெல்லாமே சிறப்புமிக்க விழா நாட்களாகும் அந்த வழக்கப்படி தைமாதம் என்பது உத்தராயண காலத்தின் ஆரம்பம். (அதாவது தேவர்களின் பகல் பொழுது என்பதால் தை மாதம் அவர்களுக்கு காலைப் பொழுதாகும்)

இதில் தைப்பூசத் தினத்தில் தான் சிவாம்சமான சூரியன் மகர ராசியில் இருக்க, சக்தி அம்சமான சந்திரன் கடகராசியில் (பூசநட்சத்திரம்) ஆட்சி பெற்றிருக்க சூரிய சந்திரர்கள் பூமிக்கு இருபுறமும் நேர்கோட்டில் நிற்பர்.

அறிவியல் ரீதியாக பௌர்ணமி என்பது என்ன என்று நமக்கு தெரியும். சூரியனுக்கும் பூமிக்கும் நடுவில் சந்திரன் இருக்கும். சூரியனின் ஒளி பூமியின் மறைத்தல் இல்லாமல் முழுமையாக விழுவதால் தான் அது முழு நிலாவாக (பௌர்ணமி யாக) இருக்கிறது. இதை தான் மேலே ஜோதிட ரீதியில் சொல்லப்பட்டு இருக்கிறது.

ஆக தைமாதத்தில் பூச நட்சத்திரத்தில் வரும் பௌர்ணமி நாளில் கொண்டாடப்படுவது தான் தைப் பூசம் ஆகும்.

இந்த நாளில் பல சிறப்புகள் நடந்ததாக புராண கதைகளும், வரலாற்று செய்திகளும் சொல்கின்றன.

இந்த நாளில் உலகம் தோன்றியதாக சொல்லப்படுகிறது. அதாவது worlds birthday என்று சொல்லலாம். தனி மனித பிறந்த நாளேயே கொண்டாடும் நாம், Worlds birthday வை கொண்டாட வேண்டும் அல்லவா..

முருகப் பெருமான் சூரசம்ஹாரம் செய்ய

அன்னை உமையவளை வேண்டினார். உமையவள் தன் சக்தியின் மூலம் வேல் வடிவில் உருவாகி முருகனிடம் கொடுத்தாள். Philosophical ஆக சொல்வதானால் அறிமையின் வடிவம் அசுரன், அவனை இறைவனாகிய முருகன் ஞான வடிவாகிய வேலைக் கொண்டு அழிக்க போகிறார். (அதாவது Ignorance was defeated by intelligence)

அத்தகைய வேலையை செய்ய போகிற வேல் (vel) பிறந்தநாள் (முருகன் பெற்ற நாள்) தைப்பூசத் திருநாள் ஆகும்.

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் இடையே ஏற்பட்ட போரில் தேவர்களால் அசுரர்களை அழிக்க முடியவில்லை.

எனவே பல்வேறு இன்னல்கள் கொடுத்து வந்த அசுரர்களை அழிக்க வேண்டி சிவபெருமானிடம் தேவர்கள் முறையிட்டனர். எங்களால் அசுரர்களை அழிக்க முடியவில்லை. எனவே எங்களுக்கு தலைமை தாங்கிச் செல்லக்கூடிய ஆற்றல் வாய்ந்த, சக்தி மிக்க ஒரு தலைவனை உருவாக்க வேண்டும் என்று அவர்கள் சிவபெருமானிடம் வேண்டினர்.

கருணைக் கடலான எம்பெருமான், தேவர்களின் முறையீட்டை ஏற்று தனது தனிப்பட்ட சக்தியால் உருவாக்கிய அவதாரமே கந்தன் என்னும் முருக கடவுள் ஆவார். சிவனின் நெற்றிக்கண்ணில் இருந்து வெளியான ஆறு தீப்பொறிகள் ஆறு அழகான குழந்தைகளாயின. கார்த்திகைப் பெண்களால் அக்குழந்தைகள் வளர்க்கப்பட்டு பின்னர் ஆறுமுகங்களுடன் அவதரித்தார். அன்னை பார்வதி ஆண்டி கோலத்தில் பழனி மலையில் வீற்றிருக்கும் முருகப்பெருமானுக்கு ஞானவேல் வழங்கியது தைப்பூச நாளில்தான்.

அம்பாள் அளித்த வேலை ஆயுதமாகக் கொண்டே முருகன் தேவர்களுக்குத் தொல்லை கொடுத்த அரக்கர்களை திருச்செந்தூரில் வதம் செய்து தேவர்களை நிம்மதி அடையச் செய்தார். ஆகவேதான் முருகரைப் போலவே அவரது வேலுக்கும் தனி சக்தியுண்டு. அசுரர்களை வதம் செய்ய உதவிய முருகப்பெருமானின் வேலை பூஜிப்பதாலேயே தீய சக்திகள் நம்மைத் தாக்காமல் இருப்பதுடன், அந்த சக்திகள் நமக்கு அடிபணிந்து நல்லருளை நல்கும் என்பது ஐதீகம்.

ஸ்ரீவள்ளியை முருகப் பெருமான் திருமணம் புரிந்த நாள் தைப்பூச நன்னாளில் தான். அதாவது முறையான பக்தி செய்தால் ஜீவாத்மாவான நம்மை தேடி வந்து இறைவன் ஆட்கொள்ளவான் என்று உணர்த்திய தினம். வள்ளி திருமணம் உணர்த்தும் தத்துவம் இது தான்.

புலிக்கால் முனிவரான (வியாக்ரபாதர்), பதஞ்சலி முனிவர், ஜைமினி முனிவர் ஆகிய மூவருடன் ,முப்பத்து முக்கோடி தேவர்கள், முனிவர்கள் என அனைவரும் தரிசிக்கும் வகையில் உமையவளுடன் இறைவன் நடனம் ஆடினார். இறைவனுடைய ஆடலே உலக இயக்கத்தை நடக்கிறது என்பதை உணர்த்தி மனிதனின் கர்வத்தை போக்கிய சம்பவம் நடந்த தினம் இத் தைப்பூசம்.

பூச நாளின் பிரதான தேவதை குரு பகவான். கோள்களில் ஞானம் தருபவர். அது போல் நட்சத்திரங்களில் பூச நட்சத்திரம் சிறப்பு வாய்ந்தது. ஆதலால் தைப்பூசத்தன்று புனித தீர்த்தத்தில் நீராடி, குரு பகவானை, குருவின் குருவான ஸ்ரீதட்சிணாமூர்த்தியை வழிபடுவதால் கல்வி ஞானத்தில் சிறந்து விளங்கலாம். ஆக ஞானம் தரும் நாளாக விளங்குகிறது.

ஆன்மிகம் தத்துவம் உடல்நலம் பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்





வளர்ந்து வரும் டிஜிட்டல் யுகத்தில்
இந்து சமயக் கருத்துக்களையும்,
பழமையான ஆன்மீக புத்தகங்களையும்
ஆன்மிகமலர் டிரஸ்ட்
Tamilnadu Government Redg.304/2016
முழு முயற்சியுடன் டிஜிட்டல் மயமாக்கி வருகிறது.
அழகிய வண்ணங்களுடன்,
கண்ணைக்கவரும் விதத்தில்
புத்தம் புதிய பொலிவுடன்,
அனைத்துவித டிஜிட்டல் கருவிகளின் மூலமும்
சிறுவர் முதல் வயதானவர் வரை அனைவரும்
தெளிவாக படிக்கும்விதத்தில் தயாரித்து வருகிறோம்.
எங்களின் சேவைக்கு உங்கள் உதவி அவசியம்
உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம்.
AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 310601011001269
IFSC CODE:VIJB0003106
MICR CODE: 600029043
VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.
மேலும் தொடர்பு கொள்ளவும்
7299992699 / 8825844033

# தொழில் பங்குதாரராக முருகனை சேர்க்கும் பக்தர்கள்

தைப்பூச விழா தமிழகம் மட்டுமின்றி, மலேசியா, சிங்கப்பூர், இலங்கை போன்ற அண்டை நாடுகளிலும் வெகு சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

கேரள மக்கள் தைப்பூசத்தை வெகு விமரிசையாக கொண்டாடி வருகின்றனர். தமிழக மக்கள் சபரிமலைக்கு மாலை அணிந்து இருமுடி கட்டி செல்வதைப் போன்று, கேரள மக்கள் குறிப்பிட்ட இடத்திலிருந்து பழனிக்கு பாதயாத்திரை செல்கின்றனர்.

ஆரம்ப காலத்தில் பழனியில் முதன்மை தெய்வமாக அம்மையப்பனாக இருந்த சிவபெருமானும், சக்தி தேவியும்தான் விளங்கினர்.

பெரியநாயகி அம்பிகை (பார்வதி) கைலாசநாதருடன் (சிவன்) தனிக்கோயிலில் அருளுகிறாள். இவர்களது சந்நிதியின் நடுவில் முருகன் சந்நிதி அமைந்துள்ளது. பிரதான வாசலும்,கொடிமரமும் முருகன் சந்நிதி எதிரிலேயே அமைந்துள்ளது.

தகப்பனையும், தாயையும் வழிபட வந்தவர்கள், தகப்பன் சுவாமியான முருகனை முக்கிய தெய்வமாக வழிபட ஆரம்பித்தனர். ஆனாலும், பழமை மாறாமல் தைப்பூச திருவிழா, பெரியநாயகி அம்மன் கோயிலிலேயே நடக்கிறது. தைப்பூசக் கொடியேற்றம் இங்கு தான் நடக்கும்.

தொழில் புரியும் மக்கள் தங்கள் தொழில் சிறப்பாக அமையவும், அதிகப்படியான இலாபம் கிடைக்கவேண்டியும், பழனி முருகனை தங்களது தொழிலில் பங்குதாரராக சேர்த்துக்கொண்டு தொழில் செய்யும் வழக்கம் இன்றும் நடைமுறையில் இருக்கிறது.

தொழிலில் கிடைக்கும் இலாபத்தில் ஒருபகுதியை தொழில் பங்குதாரரான முருகனுக்கு கொடுக்கும் வழக்கத்தை கடைபிடிக்கின்றனர். தைப்பூசத்தன்று அடுத்த ஆண்டிற்கான புதிய கணக்கை முருகன் முன்னிலையில் துவக்குகின்றனர். ஒவ்வொரு வருடமும் தைபூசத்தன்று தொழில் கிடைக்கும் இலாபத்தை முருகனுக்கு கொடுத்துவிட்டு புதிய கணக்கை துவங்குவதால் தொழில் மிகச்சிறந்த முறையில் நடைபெறுவதாக பக்தர்கள் கூறுகின்றனர்.







# முருகனின் சிஷ்யைகளான வள்ளி-தெய்வானை

திருமாலின் கண்களிலிருந்து தோன்றிய அமிர்தவல்லி, சுந்தரவல்லி ஆகிய இருவரும் சடாட்சர மந்திர உபதேசம் பெற முருகனிடம் வந்தனர். குருகாணிக்கையாக தங்கள் இருவரையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று முருகனிடம் அவர்கள் வேண்டிக்கொண்டனர்.

அதற்கு குரு-சிஷ்யை விதிக ளுக்கு புறம்பாக உங்களை திரு மணம் செய்து கொள்ள முடியாது என்றும், மறுபிறவியில் வள்ளி, தெய் வானை என்ற பெயரில் என்னை நீங்கள் வந்தடைவீர்கள் என்று முருகப்பெருமான் கூறினார்.

அதன்பிறகு அன்ன ஆகாரமின்றி ஒருநிலை மனதோடு முருகனிடம் சடாட்சர மந்திரத்தை உபதேசம் பெற் றதால் அமிர்தவல்லி தேவகுலத்தில் தேவேந்திரன் மகளாக தெய்வானை என்ற பெயரில் வளர்ந்துவரமுருகன் தெய்வானையை திருப்பரங்குன்றத் தில் முதலாவதாக மணந்தார்.

அன்றாட மனித வாழ்க்கைப்படி எல்லா பணிகளையும் செய்து உணவு உட்கொண்டு முருகனிடம் சடாட்சர மந்திர உபதேசம் பெற்ற தால் சுந்தரவல்லி மானிட இனத்தில் வேடுவர்குல பெண்ணாக வள்ளி என்ற பெயரோடு வளர்ந்து வர முரு கன் காந்தரூப முறைப்படி வள்ளியை மணம் முடித்தார்.



# முப்பது முக்கோடி சிவலிங்கங்கள்

புராணங்களில் முப்பத்து முக்கோடி தேவர்கள், நாட்கள் பற்றியெல்லாம் சொல்லப்பட்டுள்ளது. முப்பத்து முக்கோடி என்றால் 33 கோடி அல்ல. 33 என்ற எண்ணுக்குப் பிறகு 26 பூஜ்யங்கள் சேர்ப்பது என்ற கருத்து உண்டு. அந்த அளவுக்கு வாழ்ந்தவன் ராவணன். சிவபக்தனான இவன், சிவதரிசனத்தை நேரில் பெற தன் ஒன்பது தலைகளை வெட்டி காணிக்கையாக்கினான். அப்படியும், சிவன் வராமல் போகவே பத்தாவது தலையையும் வெட்ட முயன்ற போது, சிவபெருமான் காட்சி தந்தார்.

அவரிடம் முப்பத்து முக்கோடி நாட்கள் வாழும் வரத்தைப் பெற்றான். அவன் வாழ்ந்த ஒவ்வொரு நாளும் ஒரு சிவ லிங்கத்தை பிரதிஷ்டை செய்து வழிபட்டான். அவ்வாறு ராவணன் பிரதிஷ்டை செய்ததில் ஒருசில லிங்கங்கங்களைத் தவிர மற்றவை இயற்கை சீற்றங்களாலும் அன்னியர்களாலும் சிதைக்கப்பட்டுவிட்டதாக கூறப்படுகிறது.

ஆனாலும் இன்றும் இராவணன் உருவாக்கிய சிவலிங்க வழிபாடு இலங்கையில் நடைபெற்றுவருகிறது.

# இறைவனின் இருப்பிற்கான சான்று

பரமஹம்ஸர் அருளுகிறார்: "மகான்களால் மறைசாற்றப்பட்டதைப் போன்ற இறை இருப்பிற்கான சான்று புத்தகங்களிலும் இல்லை, பிறரது வார்த்தைகளிலும் இல்லை.

அது உங்களுக்குள்ளேயே உள்ளது. நீங்கள் அமைதியாக அமர்ந்து பிரார்த் தனை செய்கின்றபொழுது எதுவும் நிகழவில்லையெனில் நீங்கள் இறைவனுடன் தவறான உள்நோக்கத்துடனான பிரார்த்தனையும் தொடர்புகொண்டிருக்கவில்லை. குருட்டுத்தனமான பிரார்த்தனையும் பலனளிப்பதில்லை. நீங்கள் ஒரு ஹென்றிஃபோர்டு போன்று ஆகவேண்டும் என இன்றிலிருந்து தினமும் ஐந்து மணிநேரம் பிரார்த்தனை செய்தால் அந்த வேண்டுதல் நிறைவேற்றப்படாது.ஆனால் நீங்கள் இறைவனிடம், "நான் உனது குழந்தை. நான் உனது பிரதிபிம்பத்தில் உருவாக்கப்பட்டவன். என்னை உன்னுடன் ஒன்றாக்குவாய்" என்று பிரார்த்தனை செய்தால் அந்தப் பிரார்த்தனை நிறைவேற்றப்படும்"



மேலும் அவர் கூறுகிறார்: "நான் கடல்' என அலைஉயினால் கூறமுடியாது. ஏனெனில் அலையின்றி கடல் இருக்கமுடியும். 'நான் தான் அலை' என கடல் கூறமுடியும். கடலின்றி அலை இருக்கமுடியாது. கடலானது அலையாக ஆகியுள்ளது எனக்கூறுவது சரியானது. அதே போன்றே 'நான் இறைவன்' எனக்கூறுவது மிகப்பெரிய மாயை. நீங்கள் இறைவனுடன் ஒன்றானவர் என்பதையும் உங்களால் அவனது அற்புதங்களையும் செயல்படுத்த இயலும் என்பதையும் உங்களது சொந்த அனுபவத்திலிருந்து உங்களுக்குள் உண்மையிலேயே நீங்கள் அறியவேண்டும்.

ஒவ்வொரு அணுவிலும் அனைத்து பரவெளியிலும் படைப்பிற்கு அப்பாலும் உங்களது உணர்வு நிலையை நீங்கள் உணரும்பொழுது, நீங்கள் உரிமையுடன் கூறமுடியும்.





'இறைவனும் நானும் ஒன்றே' ஆனால் அதுவரை அல்ல. இறைவனுடனான உங்க ளது இழந்துவிட்ட உறவினை நீங்கள் மறுபடி யும் நிலைநிறுத்திய உடனேயே நீங்கள் அனைத் தையும் பெற்றுவிடுவீர்கள்".

## நீங்கள் எங்ஙனம் இறைவனை அணுகமுடியும்

அறிமுகப் பேச்சாளர்களின் குறிப்புகளுக்கு பரமஹம்ஸ யோகானந்தர் பின்வரும் சொற்களில் பதிலளித்தார்.

"அன்பிற்கு மறுமொழி அளிக்காத எவரும் மனிதன் என்ற பெயருக்கே தகுதியற்றவர். அன்பிற்கு மறுமொழி அளிப்பவர்கள், பிறரது வார்த்தைகளின் வாயிலாக அவர்களிடம் வந்து சேருகின்ற இறைச் செய்தியை பெற்றுக் கொள்கிறார்கள். நான் இதனை மிகவும் திண்ணமாக உணர்கிறேன். இன்றிரவு பேசப் பட்ட வார்த்தைகளில் இறைவன் நமக்கு அருளாசி வழங்கியுள்ளான். எனக்களிக்கப்பட்ட பாசத்தினால் நான் அடக்கமுள்ளவனாக ஆக்கப்படுகிறேன்.

**26 பாகம்**

**மனித வாழ்வு மேம்படுவதற்காக**

**பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்**

புகழ்ச்சி என்னை எந்த விதத்திலும் சிறந்தவனாக ஆக்குவதில்லை. இகழ்ச்சி என்னை எந்த விதத்திலும் குறைந்தவனாகவும் ஆக்குவதில்லை. இறைவன் அனைவரிடத்திலும் பிரதிபலிக்கிறான் எனபதை மட்டுமே நான் அறிவேன்.

பரம்பொருளின் ஆனந்தத்தில் நான் மகிழ்ச்சியை உணர்வதால், என்னிடம் வருகிற அனைவருக்கும் அவனது அன்பைப் பங்கிட நான் விரும்புகிறேன்; மேலும் நான் உயிர்வாழும்வரை அவ்வாறு செய்வதை நான் தொடருவேன். நான் இப்பொழுது உயிர் வாழ்வதற்கான எனது மிகப்பெரிய விருப்பம் இதுவே"

"இறைவனை தொடர்புகொள்வதற்கான தங்களது முயற்சிகளில் எங்ஙனம் மேற்கொண்டு செயல்படுவது என்பதை மிகக்குறைவான மனிதர்களே புரிந்துகொள்கின்றனர். அநேகர் 'நாம் அவனைப்பற்றி எண்ணினாலும் சரி எண்ணாவிட்டாலும் சரி, அவன் நம்மை தாங்கு கிறான். அவன் படைத்துள்ள இவ்வுலகில் உணவையும் வாழ்க்கையின் பிற அத்தியாவசியப் பொருட்களையும் அவன் நமக்கு அளிக்கிறான்; எதற்காக இப்பொழுது அவனை தேடுவது பற்றி, கவலை கொள்ளவேண்டும். அது பரலோகத் திற்கானது' என்று வாதிடுகின்றனர் சிலர், 'நான் பிரார்த்தனை செய்கிறேன். ஆனால் அவன் செவிமடுத்துக்கொண்டிருக்கிறானா என்று எனக்குத் தெரியவில்லை; நான் எதற்காக பிரார்த்தனை செய்தேனோ, அதை நான் பெறவுமில்லை.பின் ஏன் கவலைப்படவேண்டும்?" என எண்ணுகின்றனர். மற்றவர்கள் கூறுகின்றனர், நாம் இறந்துவிட்டபிறகு தேவதைகளாகிவிடுவோம்." ஆனால் எனது நண்பர்களே, நினைவில் கொள்ளுங்கள்; உறங்குவதற்கு முன் நீங்கள் தேவதைகளாக இல்லையென்றால் உறக்கத்திற்குப்பின் நீங்கள் தேவதைகளாவதில்லை. அவ்வாறே, தேவதை களாக ஒளிவட்டத்தையும் தகுதியினால் நீங்கள் இங்கேயே அடையப்பெற்றாலொழிய வெறும் மரண உறக்கம் எனும் தகுதியின் அடிப்படையில் அவை உங்களுக்குக் கொடுக்கப்படமாட்டாது.

எதுவாக நீங்கள் இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்களோ அதற்காக நீங்கள் இப்பொழுதே இங்கேயே (பூவுலகிலேயே) உழைக்கவேண்டும்.

தேவதைகள் பூமியில் உருவாக் கப்படுகிறார்கள், சொர்க்கத்தில் அல்ல

பரமஹம்ஸர் கூறுகிறார்: "உங்கள் குறைகளிலிருந்து உங்களை விடுவிக்க மரணத்தைச் சார்ந்திராதீர்கள். நீங்கள் இறப்பிற்கு முன் இருந்த அதே மாதிரியாகத்தான் இறப்பிற்குப் பின்னும் இருக்கிறீர்கள் எது வும் மாறுவதில்லை. நீங்கள் தேகத்தை மட்டும்தான் துறக்கிறீர்கள். நீங்கள் இறப் பிற்கு முன் ஒரு திருடராகவோ அல்லது பொய்யுரைப் பவர்களாகவோ அல்லது ஏமாற்றுபவராகவோ இருந்தால் வெறும் இறப்பின் மூலம் நீங்கள் ஒரு தேவதையாக மாறுவதில்லை. அத்தகைய ஒன்று சாத்தியம் என்றால், நாம் எல்லோரும் போய் இப்பொழுதே சமுத்திரத்தில் குதித்து உடனே தேவதைகளாவோம்! இதுவரை உங்களை நீங்கள் என்னவாக செய்துகொண்டீர்களோ, இறப்பிற்குப்பின் அம்மாதிரியே இருப்பீர்கள்.

நீங்கள் மறுபிறவி எடுக்கும்போது நீங்கள் அதே இயல்பை உங்களுடன் கொண்டு வருவீர்கள்.

மாறுவதற்கு நீங்கள் முயற்சிஎடுக்கவேண்டும். இந்த உலகம்தான்நம்மை மாற்றுவதற்கான இடம். ஆன்மாவை பிணைத்திருக்கும் தளைகளை அறுக்க கற்கும் ஒரே நோக்கத் திற்காக மட்டும்தான் இங்கு ஒரு மனிதன் வருகிறான். நோய், தோல்வி, பேராசை, மறுப்பு, பொறாமை இத்தளைகளை இப்பொழுதே முறியடித்து விடுங்கள். உங்களது தீயப் பழக்கமெனும் பட்டுப்புழுக்கூட்டில் நீங்கள் இருக்கிறீர்கள் சுயமுயற்சி மூலம் அதிலிருந்து நீங்கள் வெளிவரவேண்டும். ஆன்மாவெனும் பட்டாம்பூச்சி தெய்வீக குணங்களெனும் தனது அழகிய இறக்கைகளை விரிப்பதற்கு விடுதலை செய்யப்படவேண்டும். பட்டுநெசவாளர் வரும் பொழுது பட்டுப்பூச்சி இன்னும் தன் கூட்டிலேயே இருந்தால், தான் விரித்த வலையிலேயே அது மாட்டிக்கொண்டு அங்கேயே இறக்கிறது, அது போலவே நீங்கள் உங்களைச் சுற்றிய தீய பழக்கங்கள் எனும் கயிறுகளை நெய்து அவற்றுள் இன்னும் கட்டுண்டவர்களாய் இருக்கிறீர்கள்."

### தெய்வீக சாம்ராஜ்யம் பணயம் வைக்கப்பட்டிருக்கிறது

"நாம் இறைவனின் முழு சாம்ராஜ்யத்தை அடைவதை உலகப்பற்று என்னும் ஒரு வலிய விஷயம் தடைசெய்யக்கூடாது என்பதற்காக மகான்கள் பற்றின்மையை வலியுறுத்துகின்றனர். எல்லாவற்றையும் விட்டுவிடவேண்டும் என்பது துறவின் பொருளல்ல. நித்திய ஆனந்தத்திற்கான சிறிய இன்பங்களை விட்டுவிடுவது எனப் பொருள்படும்.

இறைவனுக்காக நீங்கள் பணியாற்றும் பொழுது அவன் உங்களிடம் பேசுகிறான். மேலும் நீங்கள் அவனுடன் இடைவிடாமல் பேசவேண்டும். உங்கள் மனதில் உண்டாகும் எந்த எண்ணத்தையும் அவனிடம் கூறுங்கள். "இறைவா, தரிசனம் கொடு, தரிசனம் கொடு என்று அவனிடம் கூறுங்கள்". 'இறைவா, தரிசனம் கொடு, தரிசனம் கொடு' என்று அவனிடம் கூறுங்கள்." மௌனத்தை பதில் என்று எண்ணாதீர்கள். நீங்கள் விரும்பிய பொருளை உங்களுக்குக் கொடுத்து, நீங்கள் அவனது கவனத்தில் இருக்கிறீர்கள் என்பதை உங்களுக்குத் தெரிவித்து அதன்மூலம் பதிலை முதலில் வெளிப்படுத்துவான். ஆனால் அவனுடையபரிசுகளில்திருப்தி அடையமாட்டீர்கள் என்பதை அவனுக்குத் தெரியப்படுத்துங்கள். இறுதியாக அவன் உங்களுக்கு பதிலளிப்பான். உங்களுடைய மனச் சாட்சியில் ஏதாவது ஒரு மகானின் முகத்தைப் பார்க்கலாம். அல்லது ஒரு தெய்வீகக்குரல் உங்களிடம் பேசு வதை நீங்கள் கேட்கலாம். மேலும் நீங்கள் இறைவனுடன் தொடர்பு கொண்டிருக்கிறீர்கள் என்பதை தெரிந்துகொள்வீர்கள். இறைவன் மீது உங்களுக்குத் தணியாத தாகம் இருக்கும் பொழுது தேவையற்றஉலக சோதனைகள் அல்லது சரீர சோதனைகள்முக்கியத்துவம் கொடுக்காமலிருந்தால் எந்தவித சாக்கையும் ஒத்துக்கொள்ளாமலிருந்தால் அப்பொழுது அவன் வருவான். இறைவனின் பதிலை ஒருமுறை பெறுவதுதான் சிரமம். அவனுடைய மௌனத்தை ஒருமுறை சுவைத்துவிட்டால் பின்னர் அவன் நம்முடன் பேசிக்கொண்டிருப்பான்."

"இறைவன் பதிலளிப்பானா என்ற சந்தேகத் தை நீங்கள் உங்கள் மனதிலிருந்து கண்டிப்பாக நீக்கவேண்டும். அநேகர் அவர்களுடைய அவ நம்பிக்கையால் எந்த பதிலும் பெறுவதில்லை. வெற்றி காணும் மனிதன் 'முடியாது' என்ற வார்த்தையை அறியமாட்டான். நம்பிக்கைதான் உங்களுக்கு இருக்கும் இறைவனின் எல்லையற்ற சக்தியேயாகும். இறைவன் ஜாதி, மத, இன, நிற பேதமின்றி ஒவ்வொரு மனிதனுக்கும் பதி லளிப்பான். வங்காளத்தில் ஒரு பழமொழி உள் ளது. நீங்கள் இறைவனை ஜகன்மாதாவாக நினைத்து ஆத்மார்த்தமாக அழைத்தால் அவனால் மௌனமாக இருக்கமுடியாது. அவன் பேசித்தான் ஆகவேண்டும். இன்று நான் எனக்குள் தோன்றிய உங்களுக்குக் கூறிய எல்லா விஷயங்களையும் எண்ணிப்பாருங்கள். நீங்கள் உங்கள் கோரிக்கை களில் தொடர்ந்து விடாப்பிடியுடன் இருந்தால் இறைவன் உங்களுக்குப் பதில் அளிப்பான் என்பதில் சந்தேகமில்லை."

பரமஹம்ஸர் மேலும் கூறுகிறார்: "இறைவனு டன் தோழமை கொள்ளும் ஆரம்பநிலையில் (சவிகல்ப சமாதி) ஒரு பக்தனுடைய உணர்வுநிலை பரமாத்மாவில் ஒன்றுபடுகிறது. அவனது உயிர்சக்தி உடலிலிருந்து உள்ளிழுக்கப்படுவதால் அவன் உடல் 'இறந்தது' போல் அல்லது அசையாமலும் விறைப்பானதாகவும் தோற்றமளிக்கிறது. உயிர்த்துடிப்பு நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் தன் உடலின் நிலையை அந்த யோகி முழுதும் உணர்ந்தே இருப்பான். ஆனால் அவன் இன்னும் உயர்ந்த ஆன்மீக நிலைகளுக்கு முன்னேறும்பொழுது (நிர்விகல்பசமாதி) அவன் சாதாரண விழிப்புணர்வில் மிகுந்த சிரமமான உலகக்கடமைகளில் ஈடுபட்டிருக்கும்பொழுதுகூட உடல் உறுதிப்பாடின்றி இறைவனுடன் தொடர்பு கொள்கிறான்."

### யோகத்தைப் பயிற்சி செய்வது ஆன்ம ஏக்கத்தை விழிப்புறச் செய்யும்

பரமஹம்ஸர் மேலும் கூறுகிறார்: "நீங்கள் இறைவனிடமிருந்து "கெட்டழிந்து மீண்ட புதல்வன்" போன்று விலகிச்சென்றுவிட்டீர்கள். அவனிடம் திரும்பி அகமுகமாக வருவதால் மட்டுமே இந்தக் கண்ணீர் பள்ளத்தாக்கை சொர்க்கப்புகலிடமாக மாற்றுவீர்கள். வேறுவழியே இல்லை. இந்த உலகத்தில் ஒவ்வொருவரும் லட்சாதிபதியாக இருந்தாலும்கூட, அசைக்க முடியாத மகிழ்ச்சியை நீங்கள் விலைக்கு வாங்க முடியாததாகையால், தொல்லைகளும் துயரங்களும் தொடர்ந்து நீடிக்கும். அது ஒரு யோகயுக்தியை பின்பற்றுவதாலும் பக்தியின் வாயிலாகவும், அகத்துள் செல்வதன் வாயிலாக வும் மட்டுமே கிடைக்கிறது. யோகத்தைப் பயிற்சி செய்வது என்பது பாதி யுத்தம்தான். ஆரம்பத்தில் உங்களுக்கு உற்சாகம் இல்லை யென்றாலும் நீங்கள் தொடர்ந்து பயிற்சி செய்து கொண்டேவந்தால் இறைவனைக் காண்பதற்கு வேண்டிய அத்தியாவசியமான மிகத்தீவிர இறை ஏக்கம் உண்டாவதை நீங்கள் உணர ஆரம்பிப் பீர்கள். நீங்கள் கிரியாயோக விஞ்ஞானத்தைப் பயிற்சி செய்தால் இறைவனுடனும் அவனுடைய மகான்களுடனும் நீங்கள் தெய்வீகத் தொடர்பு கொள்ளமுடியும். என்னுடைய ஒரே விருப்பம் என்னவெனில் உங்களுக்கு மெய்பொருளை அளிக்கவேண்டும். அதனால் நான் அனுபவித் ததை நீங்களும் அனுபவிக்கவேண்டும் என்பது தான்."

இறைவனுடன் பேசுவதற்கும் அவனை அறிவதற்கும் மேலே குறிப்பிட்டுள்ள குருதேவ ரின் போதனைகள் மிகச்சிறந்தது. அதற்கும் மே லாக அவர் எண்ணற்ற விஷயங்கள் கூறியுள்ளார். அவற்றில் முக்கியமானது மனிதகுல சேவை; மனித ஆத்மாக்கள்மற்றும்பிறஉயிர்களை நேசித்தலாகும். பிற உயிர்களிடத்தில் அன்புகொள்ளுதல் என்பது அனைத்திலும் இறைவன் நிறைந்திருக் கிறான் என்பதற்காகத்தான். பிற உயிர்களை தன் உயிர்போன்று நேசித்தல் மிகவும் முக்கிய மானது. நம்மால் எந்தவிதத்தில் நாம் பிறருக்கு உதவவேண்டும். அதற்காக ஒருவர் பெரிய தியாகமே செய்துள்ளார், அது என்னவென்ற ஒரு நிகழ்வினை கீழே குறிப்பிட்டுள்ளேன். இறைவனை அறிந்தவர்களும் அவனை மதிக்கின்றவர்களும் மட்டும்தான் கீழ்க்கண்டவாறான செயல்களைச் செய்யமுடியும்.

### விருதைத் திருப்பிய வீரர்

ஜாலியன்வாலா படுகொலையைப் பற்றி அறிந்திருக்கிறீர்கள். அந்தப் படுகொலை நடந்த வுடன் உலக அரங்கமே அதிர்ந்தது. நாட்டிலுள்ள எல்லா கட்சியினரும் இக்கொடுமையைக் கண்டித்து அறிக்கைகள் வெளியிட்டனர். தேசத் தலைவர்கள் இக்கொடுமையை கடுமையாக விமர்சித்தனர். அந்த வேளையில் ரவீந்திர நாத் தாகூர் புகழ்பெற்ற கவிஞராக இருந்தார். இந்த அக்ரமத்தையும் கொடுமையையும் அவரால் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை. எனவே ஆங்கிலேய அரசாங்கத்திற்கு மிகக் கடுமை யான முறையிலும் வன்மையான வகையிலும் உணர்ச்சி ததும்ப ஒரு கடிதத்தை அவர் எழுதி னார். அத்துடன் ஆங்கிலேய அரசால் தனக்கு அளிக்கப்பட்ட கௌரவ விருதான 'ஸர்' என்ற பட்டத்தையும் திரும்பத் தருவதாகக்கூறி அதையும் அனுப்பிவைத்தார்.

இத்தனை அற்புதமான உணர்ச்சி ததும் பிய உயர்ந்த நடையில் ஆங்கிலேயர்களே இதுபோன்று எழுதியதில்லை என்று மேலிடம் வியந்துபோனது, அதிர்ந்தும்போனது. விருதை 'வேண்டாம்' என்று திருப்பி அனுப்பிய 'தீரர்' என்ற பாராட்டும் புகழும் இன்றுவரை கவியரசு தாகூருக்கு உண்டு.

இந்த நிகழ்வு பற்றிய எனது கருத்தினைக்கூற விழைகின்றேன். இதிலிருந்து ஒவ்வொருவரும் அறிந்துகொள்ளவேண்டியது என்னவென்றால், தாகூர் இவ்வாறு செய்தது பிற உயிர்களிடத்தில் அல்லது மற்ற மனிதர்களிடத்தில் தனக்கிருந்த மேன்மையான தெய்வீக அன்பை உணர்த்தும் வகையிலான மனப்பான்மையே ஆகும். மனித சேவைக்குரிய மனநிலை உடையவர்தான் அவர் என்பதை இந்நிகழ்வு எடுத்துக்காட்டுகிறது.

ஏனென்றால், அனைவருக்குள்ளும் இறை வன் உறைந்திருக்கிறான்என்பதையும் இறை வனிடத்தில் அவருக்குள்ள ஆழ்ந்த அன்பினையும் விசுவாசத்தையும் இந்நிகழ்வு நிரூபிக்கிறது. மகான்களுக்குரிய மனப்பான்மையை அவர் வெளிப்படுத்தியிருக்கிறார் என்பதும் புலனாகி றது. பிற உயிர்களை தன் உயிர்போன்று எண் ணிய அவர் தனக்குக் கிடைத்த விருதையே தியாகம் செய்பவராக ஆனார். அதனால் அவர் ஒரு பெரிய தியாகியும்கூட ஆவார் என்பதையும் இந்நிகழ்வினால் அவருடைய செயல் புலப்படுத்தியுள்ளது. இப்பூவுலகில் வாழும்பொழுதே அவர் ஒரு தேவனாக வாழ்ந்தார் என்பதை அவருடைய வாழ்க்கை நிரூபிக்கிறது. இப்படிப்பட்டவர்கள்தான் தேவர்களும் தேவதை களும். அதை பூமியில் வாழும்போதே தம்மை உருவாக்கிக் கொள்கின்றனர். மாறாக 'சொர்க் கத்தில் அல்ல' என்ற குருதேவரின் வார்த்தை இதன் மூலம் தெளிவுபடுத்தப்படுகிறது.

மீண்டும் மலரும்...

குருப்ரியா Cell No.9894595909



www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

# ஹோமங்களில் போடும் பொருட்களின் பயன்கள்!

நாம் நடத்தும் ஹோமங்களில் பலவித சமித்துக்களை அக்னியில் போட்டு ஆகுதி செய்கிறோம். அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விதப் பலன் உண்டு.

சமித்து என்பது ஹோமகுண்டத்தில் சேர்க்கப்படும் பொருட்களைக் குறிக்கு.

ஒவ்வொரு சமித்து ஒவ்வொரு வேண்டுதல்களும் பலன்களும் உள்ளன.

| | |
|---|---|
| வில்வம்: | சிவனுக்கும் மஹாலட்சுமிக்கும் பிடித்தமானது |
| துளசி சமித்து: | நாராயணனுக்குப் பிடித்தது |
| அத்தி சமித்து: | சுக்கிரனுக்குப் பிடித்தது |
| நாயுருவி சமித்து: | புதனுக்குப் பிடித்தது |
| பலாமர சமித்து: | சந்திரனுக்குப் பிடித்தது |
| அரசரமர சமித்து: | குருவிற்குப் பிடித்தது |
| வன்னிமர சமித்து: | சனீஸ்வரனுக்குப் பிடித்தது |
| அருகம் புல்: | விநாயகருக்கும், ராகுவுக்கும் பிடித்தது |
| மாமர சமித்து: | சர்வமங்களங்களையும் சித்திக்கும் |
| பாலுள்ள மரத்தின் சமித்துக்கள்: | வியாதி நாசினி |
| தாமரை புஷ்பம்: | லஷ்மிக்கும் சரஸ்வதிக்கும் பிடித்தமானது |
| மாதுளை மரம்: | அழகான வடிவமும், வசீகரமும் கிடைக்கும். |

## சமித்து குச்சிகளும் பலன்களும்:

அத்திக் குச்சி: மக்கட்பேறு.

நாயுருவி குச்சி: மகாலட்சுமி கடாட்சம்

எருக்கன் குச்சி: எதிரிகள் இல்லாத நிலை

அரசங் குச்சி: அரசாங்க நன்மை

கருங்காலிக் கட்டை: ஏவல், பில்லி, சூனியம் அகலும்.

வன்னிக் குச்சி: கிரகக் கோளாறுகள் நீங்கிவிடும்.

புரசங் குச்சி : குழந்தைகளின் கல்வி வளர்ச்சி

வில்வக் குச்சி : செல்வம் சேரும்

அருகம்புல் : விஷபயம் நீங்கும்.

ஆலங் குச்சி :புகழைச் சேர்க்கும்.

நொச்சி : காரியத்தடை விலகும்.

வில்வம் : வில்வ சமித்தினைக் கொண்டு ஹோமம் செய்தால் ராஜ யோகம் கிட்டும்.

வில்வப்பழ ஹோமத்தால் சக்தி செல்வங்களையும் பெறலாம். சிவசக்தி சம்பந்தமான சண்டி ஹோமம் போன்ற யாகங்களில் வில்வம் சமித்தாகப் பயன்படுத்தினால் பலன்கள் நிறைய உண்டு.

துளசி : துளசி சமித்தினால் ஹோமம் செய்தால் நீண்ட காலமாக திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் கைகூடி நடைபெறும். எண்ணிய காரியம் கைகூடும்.

சோமவல்லிக் கொடி : கொடிக்கள்ளி எனப்படும் இதன் ரசத்தைப் பிழிந்து 'சோமாம்ருதம்' ம்ருத்யுஜய மந்திரத்தினால் ஹோமம் செய்தால் சகல நோய்களும் நீங்கி, தேகத்தில் அமிர்தம் உண்டாகி பிரம்மதேஜஸ் பெறலாம். கொடியை கணுக்கள் தோறும் ஒடித்து பாலில் தோய்த்து சூர்ய மந்திரம் கூறி அக்னியிடம் இட வேண்டும். இதனால் காச நோய் அகலும்.

பலாசு சமித்து : இது சந்திர கிரக சமித்தாகும். இதனால் சந்திரகிரக ப்ரீதியாகும். பலாசு புஷ்பத்தால் எல்லா இஷ்ட காரியங்களும், பலாசு ரஸத்தால் ஞான விருத்தியும், சிறந்த புத்தியும் பெறலாம். பலாசு குச்சிகளை அக்னி ஹோத்திரம் செய்து அதனால் ஸ்நாபானம் செய்யின் ப்ரம்ம ஞானம் அடைந்து பரப்பிரம்ம சொரூபம் அடையலாம்.

அரசு சமித்து: அரசு சமித்து குரு கிரகத்தின் சமித்தாகும். அரச மரத்தின் சமித்தால் தலைமைப் பதவி வரும். போரில் ஜெயம் அடைந்து அரச தன்மை கிடைக்கும்.

வெள்ளை எருக்கு: இது சூரிய கிரகத்தின் சமித்தாகும். இம்மூலிகை சர்வசக்தி பொருந்தியது. வசியம், மோகனம் ஆகிய அஷ்டாமித்துகளையும் அடையலாம். இச்சமித்துகளால் ராஜ வசியம், ஸ்திரீ வசியம், மிருக வசியம், சர்ப்ப வசியம், லோக வசியம், சத்ரு வசியம், தேவ வசியம் ஆக சர்வ வசியங்களையும் அடையலாம். எடுத்த வேலை இனிதே முடியும்.

செம்மர சமித்து: இது அங்காரக கிரக சமித்



மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
"ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"
பெற உங்கள் இமெயில் முகவரியை
கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி
வையுங்கள்
whats-app no: 7299992699
aanmeegamalar@gmail.com

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை
dailyhunt
மொபைல் அப்பில் உடனுக்குடன்
தெரிந்து கொள்ளலாம்.

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்
அனைத்து புத்தகங்களையும் படித்து
மகிழவும் டவுன்லோடு செய்யவும்
www.aanmeegamalar.com
MAGZTER
DIGITAL MAGAZINE STORE
TAP · READ · ENJOY
இணையதளங்களை பார்க்கவும்...



தாகும். இதனால் ரண ரோகங்கள் நீங்கும். தைரியம் பெருகும்

நாயுருவி சமித்து : இது புது கிரக சமித்தாகும். இதனால் லட்சுமி கடாட்சம் ஏற்படும். சுதர்சன ஹோமத்திற்கு இதுவே சிறந்தது.

அத்தி சமித்து : இது சுக்கிர கிரகத்தின் சமித்தாகும். பித்ரு ப்ரீதி பெற்று விரும்பிய பொருள் கைகூடும். பில்லி, சூனியம், பிசாசு பயங்களிலிருந்து விடுவித்து சத்ருக்களை வெல்லும். பைத்தியமும் மேக ரோகங்களும் அகலும். வாக்கு சித்தியும் ஏற்படும். பசு, யானை, குதிரை நோய் நீங்கும்.

வன்னி சமித்து : வன்னி சமித்து சனிக் கிரகத்தின் சமித்தாகும். இதில் அக்னிப் பகவான் இருப்பதாகப் புராணங்கள் கூறுகின்றன. வன்னி சமித்து யாக பஸ்மாவைத் தரித்தால் அது நெற்றியில் எழுதியிருக்கும் யம சம்பந்தமான எழுத்தைத் தொலைத்து விடும். இந்த சமித்து பஸ்பம் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மூவரையும் மூவுலகினையும் மூன்று அக்னிகளையும் முக்குணங்களையும் குறிப்பதாக இருக்கிறது. சகல தெய்வ, தேவாதிகளும் இச்சமித்தால் மகிழ்ச்சி அடைகிறார்கள். பூகம்பங்களால் உண்டாகிற பயங்கள் நீங்கும். சகல தோஷங் களும் நிவர்த்தியாகும்.

தர்ப்பை சமித்து : கேது பகவானுக்கு தர்ப்பை சமித்து மிகவும் பிடித்தமானதாகும். இது ஞான விருத்தியைத் தரும்.

அருகம்புல்: இது ராகு பகவானுக்குப் பிடித்தமானது. இதனால் பூர்வ ஜென்ம வினைகளும் சர்வ இடையூறுகளும் நீங்கி காரியம் சித்தியடையும். கீர்த்தியும், புகழும் பெறலாம். அறிவும், அழகும், வசீகரமும் உண்டாகும். கணபதி ஹோமத்தில் இதைப் பயன்படுத்துவார்கள்.

கரும்பு: கரும்புத் துண்டுகளையாவது அல்லது கருப்பஞ்சாறையாவது கொண்டு ஹோமம் செய்தால் வரனுக்கு விரும்பிய கன்னிகையும், கன்னிகைக்கு விரும்பிய வரனும் கிடைப்பர். இதையும் கணபதி ஹோமத்தில் பயன்படுத்துவார்கள்.

ஆலசமித்து: இது ம்ருத்யஞ்சய வேள்வியின் முக்கிய சமித்து. யமனுக்குப் பிடித்தமானது. இதனால் நோய்கள் நீங்கும். ஆயுள் நீடிக்கும்.

எள்: ஹோமத்தில் எள் போட்டு யாகம் செய்ய பல ஜென்மங்களில் செய்த பாவங்கள் நீங்கும். தீராத கடன் தொல்லை தீரும்.

புங்க மரம்: இதன் சமித்து வெற்றியைத் தரும்.

இலந்தை : இந்த சமித்தினால் ஹோமம் செய்ய குடும்பம் இனிது வாழ வழி உண்டாகும்.

தேவதாரு: இந்த சமித்தினால் ஹோமம் செய்தால் சகல தெய்வங்களும் வேண்டிய வரங்களைக் கொடுப்பார்கள்.

வல்லாரைக் கொடி: இதை ஆகுதி செய்தால் கல்வி சிறப்பாக வரும். ஞாபக சக்தி அதிகரிக்கும் சரஸ்வதி கடாட்சமும் ஏற்படுத்தும்.

சந்தன மரம்: இதன் சமித்தால் ஹேமம் செய்தால் மூதேவி முதலிய சகல பீடைகளையும் விலக்கி லட்சுமி கடாட்சம் ஏற்படும். சகல சம்பத்துடன் வாழ்வார்கள்.

வேங்கை மரம்: இந்த சமித்தினால் ஹோமம் செய்தால் பில்லி சூன்யம், ஏவல், பிசாசு, பயம் ஒழியும்.

மகிழம்பூ: இந்த சமித்தினால் ஹோமம் செய்தால் சகல துக்கங்களும் நிவர்த்தியடைந்து சிக்கல்கள் அனைத்தும் தீரும். மனம் அமைதி பெறும்.

பூவரசு: இந்த சமித்து பூலோக அரச மரம் என்று வழங்கப்படுகிறது. அரசு சமித்து இல்லாத குறையை இந்த சமித் அரசு சமித்தினால் செய்யப்படும் ஹோமம் தரும் பலன் இதற்கும் உண்டு.

நவதானியங்கள்: அந்தந்த கிரகங்களுக்குரிய தானியத்தால் நவக்கிரக ஹோமம் செய்தால் கிரக தோஷங்கள் விலகும். சுபிட்சம் நிலவும்.

மஞ்சள்: முழு மஞ்சள் ஸ்ரீ வித்யா ஹோமத்துக்குச் சிறந்தது. சகல வியாதிகளை நீக்கும். அதோடு கல்வியும், செல்வமும் தரும்.

நி.பாலாஜிகுருக்கள்
போன்: 9994412844





## வாருங்கள் எங்களுடன் பயணிக்க...

**உலக அளவில் இமெயில் மூலம் இலவச இதழாக வெளிவரும் நமது இதழில் ஆன்மிக நாட்டமும் விருப்பமும் உள்ள அன்பர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.**

**உங்களுக்கு தெரிந்த திருக்கோயில்கள், மகான்கள், சித்தர்கள், இந்துமத சடங்கு-சம்பிரதாயம் போன்றவற்றை**

**(உங்களது பெயர், முகவரி, தொ.பே.எண்ணுடன்)**

**எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். நமது வாசகர்கள் பயன்படுத்த பிரசுரிப்போம். தெரியாதவர் தெரிந்து கொள்ள எங்கள் பயணத்தில் நீங்களும் இணைந்து பயணியுங்கள்**

**தொடர்பு கொள்ளவும்:**

**ஆசிரியர்: நாகராஜன்**

**16, பாரதீஷ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம்**
**பொன்மணிமாளிகை அருகில்,**
**சென்னை 600024, தமிழ்நாடு, இந்தியா**
**தொலைபேசி 7299992699/ 8939499598**

## எத்தனை நாள் கையில் கயிறு இருக்கலாம்



கோயில்களில் கடவுளிடம் அர்ச்சனை செய்து தரப்படும், கைகளில் கட்டப்படும் கயிறுகள் பல்வேறு தீய சக்திகளிடமிருந்து நம்மை பாதுகாப்பதாக அமையும். ஒருசில கோயில்களில் சிவப்பு, மஞ்சள் என பல வகையான கயிறுகள் கட்டப்படுகிறது. இதை ஆண்கள் வலது கையிலும், பெண்கள் இடது கையிலும் கட்டிக் கொள்ள வேண்டும். வரலட்சுமி நோன்பு கயிறை மட்டும் பெண்கள் வலது கையில் கட்ட வேண்டும். இந்தக் கயிறுகளை பெரும்பாலானவர்கள் ஒரு வருடம் வரையிலும் கட்டிக் கொள்கிறார்கள். அவ்வாறு செய்யக்கூடாது. இந்த கயிறுகளுக்குரிய காலம் 48 நாட்கள் மட்டுமே. அதன்பின், இதைக் கழற்றி ஆற்றிலோ பிற நீர்நிலைகளிலோ போட்டு விட வேண்டும்.

## திரு. திருமதி சேர்ப்பது ஏன் ?

பெரியவர்களின் பெயருடன் “திரு’ “திருமதி’ என்றோ அல்லது “ஸ்ரீ’ “ஸ்ரீமதி’ என்று சேர்த்து சொல்வர். இதற்கான காரணம் தெரிந்தால் அதன் அருமை புரியும். செல்வத்திற்கு அதிபதி திருமகளாகிய லட்சுமி. இவளை “ஸ்ரீதேவி’ என்றும் குறிப்பிடுவர். நாராயணரின் மார்பில் லட்சுமி நித்ய வாசம் செய்வதால் அவருக்கு “ஸ்ரீநிவாசன்’ என்று பெயர். மாலவனோடு லட்சுமி இணை பிரியாமல் எப்போதும் இருக்கிறாள் என்பதால், “திரு.. மால்’ என்று பெயர். பெரியவர்களைக் குறிப்பிடும் போது, மரியாதை கருதி மட்டும் “திரு’ சேர்ப்பதில்லை. திருமகளின் அருளும், பொருளும் அவர்களைச் சேர வேண்டும் என்ற எண்ணத்திலேயே இந்த அடைமொழியைச் சேர்க்கிறோம்.

## சரஸ்வதி பொருள்



“சரஸ்’ என்றால் “பொய்கை’. “வதி’ என்றால் “வாழ்பவள்’. சரஸ்வதி என்றால் மனம் என்னும் பொய்கையில் வாழ்பவள் என்பது பொருள். இவளை கலைமகள், நாமகள், பாரதி, வாணி, இசைமடந்தை, ஞானவடிவு, பனுவலாட்டி, பிராஹ்மி, பூரவாஹினி, அயன்மனைவி, வெண்தாமரையாள், சாவித்திரி வாக்தேவி என்ற பெயர்கள் சூட்டியும் அழைப்பர்.

## வைகுண்டம்

திருப்பதி செல்பவர்கள், ஏழுமலையானை தரிசிக்க வரிசையில் நிற்க வேண்டுமே! டிக்கட் எடுக்க வேண்டுமே! என்றெல்லாம் கவலைப்பட தேவையில்லை. அவருடைய வலக்கரம் கீழ்நோக்கி திருவடியைக் காட்டியபடி இருக்கும். “சரணடையத்தக்கவன் நான் ஒருவனே’ என்பதை உணர்த்தும் இந்த அமைப்பை “வைகுண்ட ஹஸ்தம்‘ என்பர். “என் திருவடிகளை பற்றிக் கொண்டால், வைகுண்டம் செல்வதற்கு வழிகாட்டுவேன்’ என்பதை இந்த அமைப்பு உணர்த்துகிறது. ஏழுமலையானை மனதில் நினைத்து, “ஸ்ரீவேங்கடேச சரணௌ சரணம் ப்ரபத்யே’ என்ற மந்திரத்தை (ஏழுமலையானே! உன்னை நான் சரணடைகிறேன்) என்று தினமும் ஏழுமுறை மனதாரச் சொன்னாலே வைகுண்டம் நிச்சயம்.

## பைரவர் வழிபாடு



பார்வதியின் தந்தை தட்சன் யாகம் ஒன்றை நடத்தினார். இதற்கு தன் மகளையும், மருமகனையும் அழைக்கவில்லை. ஆனால், மற்ற தேவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

தன் அனுமதியின்றி கலந்து கொண்ட அவர்களின் அகந்தையை அடக்க, சிவன் பைரவரை உருவாக்கினார். உக்ர மூர்த்தியாக புறப்பட்ட பைரவர், யாக குண்டத்தை அழித்தார்.

அப்போது அவருடன் ஒரு நாய் சென்றது. வேதமே நாய் வடிவெடுத்து அவருடன் சென்றதாகச் சொல்வர். “பைரவ’ என்னும் திருநாமத்தில் உள்ள ப,ர,வ என்னும் எழுத்துகள் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களை உணர்த்துகின்றன. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆத்மா என்னும் அஷ்ட (எட்டு) சக்திகளைக் கொண்டு உலகை இயக்கு வதால், அஷ்டபைரவராக காட்சி தருகிறார். சீர்காழி தோணியப்பர் கோயிலில் அஷ்ட பைரவரையும் ஒரே இடத்தில் தரிசிக்க, தனி சந்நிதி உள்ளது. தேய்பிறை அஷ்டமி திதி மற்றும் ஞாயிறு ராகுகாலம் பைரவரை வழிபட ஏற்ற காலம். எதிரிகளை அழித்து பயத்தைப் போக்குவதில் பைரவ வழிபாடு சிறப்பானது.

## தாம்பூலப்பை ரகசியம்



நீங்கள் கல்யாணத்துக்கோ, பிற சுபநிகழ்ச்சிகளுக்கோ செல்கிறீர்கள். வரும்போது, தாம்பூலப் பை கொடுப்பார்கள். இவ்வாறு தருவதற்கு “மங்கலம்‘ என்ற ஆன்மிக காரணம் மட்டுமல்ல, அறிவியல் காரணமும் ஒளிந்துள்ளது. தாம்பூலப்பையில் தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு வைப்பதுண்டு. இந்தப்பையில் எதை வைக்கிறோமோ இல்லையோ.. வெற்றிலை, பாக்கு அவசியம் இருக்க வேண்டும். இது லட்சுமியின் அம்சம். அதனால், ஒருவர் வெற்றிலையைக் கொடுக்கும் போது, மற்றவர் மறுக்காமல் வாங்கிக் கொள்ள வேண்டும்.

அறிவியல் ரீதியாக வெற்றிலை ஆரோக்கியத்திற்கும் துணைநிற்கிறது. திருமண வீட்டில் விருந்து சாப்பாடு என்பதால், வயிறு உணவைச் செரிக்க சிரமப்படும். வெற்றிலைச் சாறு ஜீரணசக்தியை அதிகப்படுத்தி செரிக்க உதவுகிறது. நாக்கில் ஏற்படும் சுவையற்ற தன்மையைப் போக்கும் தன்மையும் இதற்குண்டு. வெற்றிலையை தனியாக சாப்பிட்டால் ரத்தஓட்டம் பாதிக்கும். பாக்கை தனியாக சாப்பிட்டால் ரத்தசோகை உண்டாகும். அதனால், வெற்றிலையை பாக்குடன் சேர்த்து உண்பதே முறையானது. வெற்றிலையில் கண்ணுக்குத் தெரியாமல் பூச்சி, புழு தங்கியிருக்கும். அதனால், நன்கு சுத்தம் செய்து, அதன் நுனி, நரம்புகளைக் கிள்ளி விட்டு சாப்பிட வேண்டும் என்பதும் கட்டாயம்.

தொகுப்பு: மூ.சக்திவேல், Cell:9787576858



ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
செல்: 8825844033
♦♦♦
இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
மூ.சக்திவேல் செல்: 9787576858
புனிதவேல் செல்: 9841807572
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033 / 07299992699

ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்ளுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
8825844033
7299992699 / 8939499598



# திருமூலர் கூறும் இளமையின் ரகசியம்

நமது உடலில் நோய் தோன்றக் காரணம் என்னவெனில், உஷ்ணம், காற்று, நீர் ஆகியவை தன்னளவில் இருந்து மிகுதல் அல்லது குறைவதால் தான். இதனாலேயே நோய் தோன்றுகிறது.

உஷ்ணத்தால் பித்த நோய்களும், காற்றினால் வாத நோய்களும், நீரால் கப நோய்களும் உண்டாகின்றன.

நமது தேகத்தை நீட்டித்து, ஆயுளை விருத்தி செய்ய திருமூலர் சித்தர் எளிய வழியை கூறுகிறார்.

ஒருவனுடைய உடல், மனம், ஆன்மா ஆகிய மூன்றையும் தூய்மை செய்யும் வல்லமை கடுக்காய்க்கு உண்டு என்று குறிப்பிடுகிறார் திருமூலர்.

கடுக்காய்க்கு அமுதம் என்றொரு பெயரும் உண்டு.

தேவர்கள் பாற்கடலைக் கடைந்தபோது தோன்றிய அமிர்தத்திற்கு ஒப்பானது கடுக்காயாகும்.

“பெற்ற தாயைவிட கடுக்காயை ஒருபடி மேலானது என்று கருதுகின்றனர் சித்தர்கள்.

கடுக்காய் வயிற்றில் உள்ள கழிவுகளை யெல்லாம் வெளித்தள்ளி, அவனுடைய பிறவிப் பயனை நீட்டித்து வருகிறது.

கடுக்காயின் சுவை துவர்ப்பாகும்.

நமது உடம்புக்கு அறுசுவைகளும் சரிவரத் தரப்பட வேண்டும். எச்சுவை குறைந்தாலும் கூடினாலும் நோய் வரும்.

நமது அன்றாட உணவில் துவர்ப்பின் ஆதிக்கம் மிகவும் குறைவு.

துவர்ப்பு சுவையே ரத்தத்தை விருத்தி செய்வதாகும்.

ஆனால் உணவில் வாழைப்பூவைத் தவிர்த்து பிற உணவுப் பொருட்கள் துவர்ப்புச் சுவையற்றதாகும்.

பின் எப்படி ரத்த விருத்தியைப் பெறுவது?

அன்றாடம் நமது உணவில் கடுக்காயைச் சேர்த்து வந்தால், நமது உடம்புக்குத் தேவையான துவர்ப்பைத் தேவையான அளவில் பெற்று வரலாம்.

கடுக்காய் அனைத்து நாட்டு மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

கடுக்காயை வாங்கி உள்ளே இருக்கும் பருப்பை எடுத்து விட்டு, நன்கு தூளாக அரைத்து வைத்துக் கொள்ளவும்.

இதில் தினசரி ஒரு ஸ்பூன் அளவு இரவு உணவுக்குப்பின் சாப்பிட்டு வர, நோயில்லா நீடித்த வாழ்க்கையைப் பெறலாம்.

## கடுக்காய் குணப்படுத்தும் நோய்கள்:

கண் பார்வைக் கோளாறுகள்,
காது கேளாமை,
சுவையின்மை,
பித்த நோய்கள்,
வாய்ப்புண்,
நாக்குப்புண்,
தொண்டைப்புண்,
இரைப்பைப்புண்,
குடற்புண்,
ஆசனப்புண்,
அக்கி, தேமல், படை,
தோல் நோய்கள்,
உடல் உஷ்ணம்,
வெள்ளைப்படுதல்,
மூத்திரக் குழாய்களில் உண்டாகும் புண்,
மூத்திர எரிச்சல், கல்லடைப்பு,
சதையடைப்பு, நீரடைப்பு,
பாத எரிச்சல், மூல எரிச்சல்,
உள்மூலம், சீழ்மூலம், ரத்தமூலம், ரத்தபேதி, பௌத்திரக் கட்டி,
சர்க்கரை நோய், இதய நோய்,
மூட்டு வலி, உடல் பலவீனம்,
உடல் பருமன், ரத்தக் கோளாறுகள்,
ஆண்களின் உயிரணுக் குறைபாடுகள்

போன்ற அனைத்துக்கும் இறைவன் அருளிய அருமருந்தே கடுக்காய்.

இதை பற்றி சித்தர் கூறும் பாடல்...

“காலை இஞ்சி
கடும்பகல் சுக்கு
மாலை கடுக்காய்
மண்டலம் உண்டால்
விருத்தனும் பாலனாமே.”

காலை வெறும் வயிற்றில் இஞ்சி
நண்பகலில் சுக்கு
இரவில் கடுக்காய் என தொடர்ந்து ஒரு மண்டலம் (48 நாட்கள்) சாப்பிட்டுவர, கிழவனும் குமரனாகலாம் என்பதே இந்தப் பாடலின் கருத்தாம்.



மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும் “ஆன்மிகமலர் மெயில் புத்தகம்” பெற உங்கள் இமெயில் முகவரியை கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்
whats-app no: 7299992699
aanmeegamalar@gmail.com

# திருச்செந்தூர் முருகன் கோவிலில் தேவர்கள் வழிபடும் பஞ்சலிங்கம்



திருச்செந்தூரில் முருகன் எழுந்தருளியிருக்கும் சந்நதிக்கு இடப்புறம் சிறிய வாசல் உள்ளது. இதன் வழியாக உட்சென்றால் முருகனுக்கு வலது பக்கம் உள்ள அறையை அடையலாம். இங்குள்ள மேடையில் ஐந்து லிங்கங்கள் வரிசையாக உள்ளன. இவற்றிற்கு லிங்கங்கள் ஆவுடையார் என்னும் சக்திபாகம் இல்லை. உருத்திர பாகமான மேல் பகுதி மட்டுமே உள்ளது. இவற்றிற்கு தினப்பூசை செய்யப்படுவதில்லை.

இந்த லிங்கங்களுக்கு நேராக மேலே துளை இருக்கிறது. நாள் தோறும் நள்ளிரவில் தேவர்கள் இவ்வழியாக வந்து இந்தப் பஞ்சலிங்கங்களைப் பூசிப்பதாக கூறுகின்றனர். குடமுழுக்கின்போது மட்டும் இந்த லிங்கங்களுக்கென யாகசாலை அமைத்து, வேள்விபுரிந்து வேள்விக் கலச நீரால் அபிஷேகம் செய்கின்றனர். சிறப்பு நாட்களில் மட்டும் பஞ் சலிங்கங் களுக்கு வழிபாடு செய்யப்படுகிறது. இந்த லிங்கங்கள் உள்ள இடத்தைப் பாம்பறை என்கின்றனர். இந்தப் பஞ் சலிங்கத்திற்கு உரிய சக்தியான பராசக்தி ஆவுடை நாயகி என்ற பெயரில் எழுந்தருளியுள்ளாள். இவளது திருவுருவம் உலோகத் திருமேனியாகும். திருச்செந்தூரின் அமைப்பை ஒட்டியே கொங்கு நாட்டு முருகன் கோயில்கள் அனைத்திலும் பஞ்சலிங்க வழிபாடு நடத்தப்படுகிறது என்கின்றனர். கொங்கு நாட்டில் உள்ள அனைத்து சிவாலயங்களிலுமே பஞ்சலிங்க வழிபாடு இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.



# பகவானின் அணிகலன்களும் ஆழ்வார்களும்



பகவானின் ஆயுதங்கள், மற்றும் அணிகலன்கள் ஒவ் வொன்றுக்கும் ஜீவன் உண்டு.

- திருமாலின் கதாயுதமே பன்னிரு ஆழ்வார்களில் பூதத்தாழ்வாராக பிறந்தது.
- சங்கு எனப்படும் பாஞ்ச சன்னியமே பொய்கையாழ்வாராக அவதரித்தது.
- திருமாலின் கட்கம் என்னும் வாளின் அம்சமே பேயாழ்வாராக அவதரித்தது.
- சக்கராயுதமே திருமழிசை ஆழ்வாராக அவதரித்தது.
- பெரியாழ்வார் கருடனின் அம்சமாக அவதரித்தார்.
- பரந்தாமனின் வில்லின் அம்சமாக பிறந்தவர் திருமங்கையாழ்வார்.
- திருமாலின் ஸ்ரீவத்சத்தின் (மரு) அம்சமாக பிறந்தவர் திருப்பாணாழ்வார்.
- கௌஸ்துவ மணியின் அம்சமாக பிறந்தவரே குலசேகராழ்வார்.





அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

# சோழிங்கிபுரமாக மாறிய கடிகாலம்



வடமதுரையை ஆட்சி செய்து கொண்டு இருந்த இந்திரத்துய்மன் என்ற அரசர், ஸ்ரீநர சிம்ம ரின் தீவிர பக்தர். அதே சமயம் கடு மையான கோபம் கொண்டவர். எதற்கு எடுத் தாலும் இவருடைய வாய் பேசாது, அவர் கையில் இருக்கும் போர்வாள் தான் பேசும். அந்த அளவிற்கு சினம் கொண்ட மன்னன்.

“அரசர் இந்திரத்துய்மன், நரசிம்மரை மட்டும் வணங்கு வதால்தான் நரசிம்மரை போல் கோபம் அதிகம் ஏற்படுகிறது. அதனால் அரசரை ஸ்ரீயோக நரசிம்மரை வணங்க சொல்லலாம்.” என்று அமைச்சர்களுக்குள் பேசி அதை பக்குவமாக அரசருக்கு எடுத்து சொல்ல ஒரு அமைச்சர் மன்னரிடம் சென்றார்.

“அரசே.. நரசிம்மரை வணங்கினால் வீரம் கிடைக்கும். அதுவே ஸ்ரீயோக நரசிம்மரை வணங் கினால் செல்வம், செல்வாக்கு கிடைக்கும். வாழ்க்கைக்கு தேவையானது முக்கியமானது சந்தோஷம். அந்த சந்தோஷத்தை தரக் கூடியவர் ஸ்ரீயோக நரசிம்மர்” என்றார் அமைச்சர்.

எறும்பு ஊற ஊற கல்லும் தேயும் என்பதை போல் அமைச்சரின் பேச்சு அரசருக்கு ஸ்ரீயோக நரசிம்மரை வணங்க வேண்டும் என்ற மன மாற்றத்தை தந்தது.

ஸ்ரீயோகநரசிம்மரை வணங்க தொடங்கினார் இந்திரத்துய்மன்.

ஒருநாள், அரசர் காட்டு பகுதிக்கு வேட்டை யாட சென்றார். மான் ஒன்று, பொன்னை போன்று ஜொலித்தது.

அதை கண்ட அரசர், அந்த மானை தன் அரண் மனைக்கு அழைத்து செல்ல விரும்பி, மானை பிடிக்க நினைத்தார்.

ஆனால் அந்த மானை பிடிக்க முடியவில்லை.

பொன்மான், மன்னருக்கு விளையாட்டு காட்டியது.

இதனால் சோர்வடைந்த மன்னர், ஓர் இடத் தில் களைப்பாக அமர்ந்தார்.

அப்போது அங்கே ஒரு அதிசயம் நடந்தது. அந்த பொன்மான், மன்னர் கண் முன்னே ஒரு ஜோதியாக மாறியது.

இதை கண்ட அரசர் இந்திரத்துய்மன் ஆச்சரி யப்பட்டார்.

அந்த ஜோதி ஸ்ரீஆஞ்சநேயனாக காட்சி கொடுத்து. “நான் என்றும் உனக்கு பாதுகாப்பாக இருப்பேன்.” என்று கூறி மறைந்தார் ஸ்ரீஅனுமன்.

தமக்கு ஸ்ரீஅஞ்சனேயர் ஆசி கிடைத் திருக்கிறது என்றால் எல் லாம் ஸ்ரீயோக நரசிம்மரின் அருளால்தான் என்று ஆனந்தம் கொண்டார் அரசர். சில நாட்கள் சென்றது.

அப்போது கும்போதரன் என்ற அசுரன், வடமதுரையை ஆட்டிபடைத்தான்.

அந்த அசுரனிடம் இருந்து தன்னையும் தன் நாட்டையும் காப்பாற்றுமாறு ஸ்ரீயோக நரசிம் மரிடமும், ஸ்ரீஆஞ்சனேயரிடமும் வேண்டினார் அரசர் இந்திரத்துய்மன்.

ஸ்ரீஅனுமன், அரசரின் வேண்டுதலை நிறை வேற்ற, அசுரன் கும்போதரனிடம் போர் செய்து அவனை வீழ்த்தி கொன்றார்.

இதனால் அரசர் மகிழ்ந்தார். அனுமனின் அருளால் எழுப்பப்பட்ட திருக்கோயிலில், மன தார வழிபட்டு யோக நரசிம்மரின் அருளை உலகறியச் செய்தார்.

இந்த மலைக்கு சோழிங்கபுரம் என்று பெயர் பெற்று பக்தி மலையாக விளங்குகிறது.

இம்மலைக்கு கடிகாசலம் என்ற திருநாமமும் உண்டு அந்த பெயர் ஏற்பட மிக முக்கிய காரண மாக ஒரு வரலாறு கூறப்படுகிறது.

நரசிம்மர் ராம அவதாரம் முடிந்ததும் ராமபிரான் வை குண்டம் எழுந்தருளும் வேளையில், தாமும் உடன் வருவதாக கூறினார் ஆஞ்சநேயர்.

ஆனால் ராமபிரான், ‘கடிகாசலத்தில் என்னைக் குறித்து தவம் செய்யும் சப்த ரிஷி களுக்கும், காலன் மற்றும் கேயன் எனும் இரு அரக்கர்கள் தொல்லை கொடுக்கிறார்கள்.

அவர்களை என்னுடைய சங்கு, சக்கரத்தால் அழித்து கலியுகம் முடியும் வரை நீயும் கடிகா சலத்தில் சங்கு, சக்கரத்துடன் இருந்து யோக ஆஞ்சநேயராக மக்களுக்கு அருள்பாலித்து கலியுகம் முடியும் வேளையில் எம்மை வந்தடை வாய்’ என்று கூறிவிட்டார்.

இதனால்தான் யோக நிலையில் சங்கு, சக்கரத் துடன் அமர்ந்த நிலையில் ஆஞ்சநேயருக்கு






தனி சன்னிதி கோவிலில் இருக்கிறது.

கலியுகம் முடியும் வரை அனுமனும் கலியுகத்திலேயே வாழ்வதாக ஐதீகம்.

எனவேதான் இன்றும் பக்தியோடு, ராமாயணம் படிக்கும் இடம் தோறும் ஆஞ்சநேயர் அருவமாகவோ, உருவமாகவோ வந்து கலந்து கொள்வதாக ஐதீகம்

விஸ்வாமித்திரர் இம்மலையில் ஒரு கடிகை அதாவது ஒருநாழிகை (24 நிமிடம்) நேரத்தில் ஸ்ரீநரசிம்மரை நோக்கி துதித்து பிரம்ம ரிஷி பட்டம் பெற்றார் கடிகை என்றால் வடமொழியில் ஒருநாழிகை என்ற பொருள்.

இந்த ஆலயத்தில் ஒருநாழிகை நேரம் இருந்தாலே எல்லா கஷ்டகாலமும் விலகும் என்கிறார்கள்.

நம்மாழ்வார், பேயாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகியோரால் மங்களாசாசனம் பெற்றத் தலம் இது.

ஸ்ரீமந் நாத முனிகளும், மணவாள மாமுணியும், ராமானுஜரும், திருக்கச்சி நம்பிகளும் இங்கு மங்களாசாசனம் செய்துள்ளனர்.

ஸ்ரீயோக நரசிம்மரை வணங்கிய பிறகு ஸ்ரீஆஞ்சனேயரை வணங்க வேண்டும் என்கிறது சாஸ்திரம்.

முதலில் கடிகாலம் என்ற திருநாமத்துடன் விளங்கியதாகவும் பின்பு இத்திருத்தலம் சோழங்கிபுரம் என்று மாறியதாகவும் கூறப்படுகிறது.

பக்த பிரகலாதனுக்காக தூணில் இருந்து அவதரித்தவர் நரசிம்மர் அத்திரி, காஷ்யபர், வசிஷ்டர், ஜமதக்னி, கவுதமர், பரத்வாஜா, விஸ்வாமித்ரர் என சப்த ரிஷிகளின் வேண்டுகோளுக்கு இணங்கி நரசிம்மப் பெருமாள் சோளிங்கபுரம் தலத்தில் சாய்ந்த நிலையில், யோக முத்திரையோடு தியானக் கோலத்தில் காட்சியளிக்கிறார்

இங்குள்ள பெரிய மலையின் உச்சியில் வடக்கு நோக்கியபடி ஐந்து நிலை ராஜகோபுரம் உள்ளது.

அதனைக் கடந்தால் சாளக்கிராம மாலை அணிந்து மூலவராய் யோக நரசிம்மர் கிழக்கு பார்த்த வண்ணம் அருள்பாலித்து வருகிறார்.

அம்ருதவல்லித் தாயார் தனிச்சன்னிதியில் பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.

இத்தலத்தின் உற்சவர் பக்தவச்சலப் பெருமாள் என்பதாகும்.

புண்ணியங்கள் தேடி எங்கெங்கோ அலைபவர்கள் இத்தலத்தில் சிறிது நாழிகை தங்கினாலே புண்ணியம் கிடைக்கு என்பதால், நாம் புண்ணிய யாத்திரை செல்ல உகந்த தலம் இந்த சோழங்கர் திருத்தலம்.







8ம் ஆண்டு விழா

தைப்பூசத்தையொட்டி
பழநி முருகனை தரிசிக்க
பாதயாத்திரையாக
வரும் பக்தர்களுக்கு
அன்னதானம்

நாள்: 29-01-2018 திங்கட்கிழமை

அன்புடையீர்,

அண்ணாமலையார் ஆன்மிக வழிபாட்டு குழுவின் சார்பில், தைப்பூசத்தையொட்டி பழநிக்கு பாதயாத்திரையாக வரும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கும் விழா, 8ம் ஆண்டாக வரும் 29.1.2018ம் தேதி ஒட்டன்சந்திரம் குழந்தைவேலப்பர் சன்னதி அருகே L.N திருமண மண்டபத்தில் நடைபெறும்.

அன்னதான 'குடிலில்' காலை 7:00 மணி முதல் 10:00 மணிவரை சிற்றுண்டியும், மதியம் 12:00 மணிக்கு தலை வாழை இலை சாப்பாடும் பாதயாத்திரை பக்தர்களுக்கு வழங்கப்படும். இதில் அனைவரும் பங்கேற்று, விரதமிருந்து வரும் பாதயாத்திரை பக்தர்களை வணங்கி வரவேற்று பழநி முருகன் அருள் பெறுவோமாக!

பழநி முருகன் அன்னதான குடில்
திண்டுக்கல் - சென்னை

தொடர்புக்கு: 99443 09719 / 98421 98889
www.annamalaiyar.com

## தேகத்தில் தான் ஆண், பெண் வித்தியாசம்

# சிவ சக்தியாக காட்சியளித்த மகான்



ராமச்சந்திர ஐயர். ஆந்திராவிலிருந்து வந்தவர். குடும்ப வாழ்க்கையில் ஏற்பட்ட பிரச்னைகளால் வாழ்க்கையை வெறுத்து திருவண்ணாமலைக்கு வந்தவர், முதலில் ரமணரின் தரிசனம் பெற்றார். பின்னர் சேஷாத்ரி சுவாமிகளைப் பற்றிக் கேள்விப்பட்டு அவரைத் தேடி அலைந்தார். அவ்வளவு எளிதில் சுவாமிகளைப் பார்க்க முடியவில்லை.

ஒருநாள் சுவாமிகள் குளக்கரையில் உட்கார்ந்து இருந்தார். அங்கு சென்ற ஐயர், சுவாமிகளின் காலில் விழுந்து வணங்கினார். தான் எப்பொழுதும் மகானின் கூடவே இருக்க ஆசைப்படுவதாகவும், அதற்கு சுவாமிகள் அனுக்கிரகம் செய்ய வேண்டும் என்றும் வேண்டினார்.

சுவாமிகளோ “டேய்... ஒருத்தருக்கும், ஒண்ணும் சொந்தமில்லை. ஆகாயத்திலே ஒருத்தன் போனான். பூமியிலே ஒருத்தன் போனான். என்ன கதி ஆச்சு? போடா போ பேமானி” என்று சொல்லிவிட்டு வேகமாக எழுந்து போய் விட்டார்.

ஐயருக்கு ஒன்றும் புரியவில்லை. இருந்தாலும் மகானைப் பின்தொடர்ந்து செல்வது, அவருக்கு ஏதாவது தொண்டு செய்வது என்று முடிவெடுத்து மகானைத் தேடலானார்.

கடைசியில் மகான் ஈசான்ய லிங்கம் அருகே கழுதைகளோடு விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டார். உடனே அவரை நோக்கிச் சென்றார். உடனே மகான் வேகவேகமாக அவ்விடம் விட்டு நகர்ந்தார். உடன் ஐயரும் பின் தொடர்ந்து செல்ல ஆரம்பித்தார்.

மகான் கோயிலுக்குள் சென்றார். வெயில் கொதித்துக் கொண்டிருந்தது. அங்கே உள்ள ஓர் அம்மி மீது உட்கார்ந்தார். 'வா, வா நீயும் உட்காரு' என்றார் மகான் ஐயரிடம்.

ஐயர் திடுக்கிட்டார். மெள்ள அம்மியைத் தொட்டுப் பார்த்தார். அது தகித்துக் கொண்டிருந்தது.

'பரவாயில்லை உட்கார்' என்றார் மகான்.

வேறுவழியில்லாமல் சற்று தயக்கத்துடன் உட்கார்ந்தார் ஐயர்.

என்ன ஆச்சர்யம்! அம்மி சுடவில்லை. மாறாக மிகவும் குளிர்ச்சியாக இருந்தது.

'ஹா ஹா'வெனச் சிரித்த மகான், 'ஏண்டா, என் பின்னடியா வற்ற, வா, வா... வா பார்க்கலாம்' என்று கூறி, குதித்து ஓடி விட்டார்.

ஐயரால் அவரைப் பின் தொடர்ந்து செல்ல முடியவில்லை. மகான் வேகமாக ஓடி எங்கோ மறைந்து விட்டார். ஐயர் மகானைத் தேடுவதும், சேஷாத்ரி சுவாமிகள் திடீரெனக் காணாமல் போவதுமாக இப்படியே சில நாட்கள் கடந்தன.

ஒருநாள்... மகான் தனக்கு முன்னால் வேகமாக நடந்து சென்று கொண்டிருந்ததைக் கண்டார் ஐயர். வேகவேகமாகப் பின் தொடரலானார். அப்பொழுது திடீரென ஒரு அழகான பெண் மகான் எதிரே வந்தாள். அவளைப் பார்த்த மகான் அப்படியே அவளைக் கட்டிக் கொண்டார். “மாட்டிகிட்டியா, மாட்டிகிட்டியா இன்னிக்கு நல்லா மாட்டிகிட்டியா” எனக் கூறி அவளை அணைத்தவாறே எங்கோ சென்றார். அதைப் பார்த்த ஐயருக்கு அதிர்ச்சியாகி விட்டது. “மகானுக்கு ஏன் இந்தப் பெண் சபலம்?” என்று நினைத்தார். மௌனமாகப் பின் தொடரலானார். மகான் அந்தப் பெண்ணுடன் ஒரு வீட்டிற்குள் சென்று மறைந்து விட்டார்.

“மகான் வெளியே வரட்டும். அவரைக் கையும் களவுமாகப் பிடித்து விடலாம், இந்த வயதில் இவருக்கு ஏன் இந்த அல்ப பெண்ணாசை” என்று கேட்டு விடலாம் என வீட்டு வாசலில் காத்துக் கொண்டிருந்தார் ஐயர்.

பொழுது சாய்ந்தது. பகல் போய் இரவும் வந்தது. மகான் வெளியில் வரவே இல்லை. மறுநாள் பொழுதும் புலர்ந்தது. வாசல் தெளிக்க ஒரு கிழவி வெளியே வந்தாள். வெளியே கால் கடுக்க நின்று கொண்டிருக்கும் ஐயரைப் பார்த்தாள். என்ன, ஏது என்று விசாரித்தாள்.

ஐயரும், சேஷாத்ரி சுவாமிகள் ஒரு பெண்ணுடன் உள்ளே சென்றதைத் தெரிவித்தார்.

உடனே அந்தக் கிழவி, “ஐயோ, இங்கே யாருமே இல்லையே, பல வருஷமா நான் மட்டும்தானே தனியா இருக்கிறேன். சேஷாத்ரி சுவாமி பின்னாலயா வந்தீங்க. அது பைத்தியம் போல எங்கயாவது சுத்திக்கிட்டு இருக்குமே!, அதை யாராலும் பிடிக்க முடியாதே!” என்றாள்.

ஐயர் ஒன்றும் புரியாமல் வெறுத்துப் போய் திகைப்புடன் நடக்க ஆரம்பித்தார். வழியில் ஒரு குளத்தில் சேஷாத்ரி சுவாமிகளைப் பார்த்தார். சில பெண்களுடன் சுவாமிகள் குளித்துக் கொண்டிருந்தார். தண்ணீரை அள்ளி அள்ளி வீசி அவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தார். சில பெண்களைக் கட்டி அணைத்து முத்தமிட்டார்.

இதைப் பார்த்த ஐயருக்கு அதிர்ச்சியும் ஆத்திரமும் ஏற்பட்டது. “அங்கே அந்த வீட்டுக்குள் நுழைந்தவர், இங்கே எப்படி வந்தார்?” என்று யோசித்தார். அவருக்கு ஒன்றும் புரியவில்லை. திகைத்துப் போய் தனது இருப்பிடத்திற்குச் திரும்பச் சென்று விட்டார்.

மறுநாள்.. அண்ணாமலையார் ஆலயத்துக்குச் சென்றார் ராமச்சந்திர ஐயர். அங்கே, சுவாமிகள் இரண்டு பெண்களின் தோள்களில் கை போட்டு அணைத்தவாறே ஏதோ பேசிக் கொண்டு, கோவிலிலிருந்து வந்து கொண்டிருந்தார். இதைப் பார்த்த ஐயருக்கு மேலும் திகைப்பும் வெறுப்பும் ஏற்பட்டது. 'மகான் ஒரு பெண் பித்தர் போலும், அதுதான் பெண்கள் பின்னால் எல்லாம் சுற்றுகிறார். இனி இவரைப் பின் தொடர்வது வீண்' என்று நினைத்தவர் கோயில் மண்டபத்தில் போய் உட்கார்ந்து விட்டார். தனக்கு நல்லதொரு வழியைக் காட்டுமாறு இறைவனை வேண்டி, அன்று முழுவதும் உணவு உண்ணாமல் ஜெபம் செய்யத் தொடங்கினார்.

அன்று இரவு. சத்திரத்தில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தார் ஐயர். அப்பொழுது அவருக்கு ஒரு கனவு வந்தது. அதில் மகான் ஸத்குரு ஸ்ரீசேஷாத்ரி சுவாமிகள் தோன்றினார். அவரைச் சுற்றிலும் பெண்கள்.

“டேய், பேமானி, யார்ரா தாசி, யார்ரா வேசி! முட்டாப்பயலே... யார் ஆண்..., யார் பெண்...” என்று கேட்டார். பின் “இதோ பார், இவள் காமாட்சி, இவள் விசாலாட்சி, இவள் உண்ணாமுலை, இவள் பச்சை அம்மா, இவள் துர்க்கை” என்றார். ஒவ்வொரு பெண்களும் மகானின் உடலில் ஐக்கியமாகினர். மகான் சிவ சக்தி சொரூபமாய்க் காட்சி அளித்தார். பின்னர் “டேய் முட்டாள், தேகத்தில் தான்டா ஆண், பெண் வித்தியாசம் எல்லாம், ஆன்மாவில் இல்லை, புரியுதா? என் பின்னாடி வற்றதை விட்டுட்டு தியானம் செய், உனக்கு நற்கதி கிடைக்கும்' என்று கூறி ஆசிர்வதித்தார்.

ஐயர் திடுக்கிட்டு விழித்துப் பார்த்தார். சற்று தொலைவில் மகான் வேக வேகமாகச் சென்று கொண்டிருப்பது தெரிந்தது. அங்கேயே விழுந்து வணங்கியவர், “புத்தி வந்தது. இனி உங்களைப் பின் தொடர மாட்டேன்.” என்று கண்ணீர் மல்கக் கூறினார். அதுமுதல் மகானைப் பின் தொடருவதை விட்டுவிட்டு, அவர் கூறியவாறே தியானம் செய்ய ஆரம்பித்தார். ஆன்மீகத்தில் உயர்ந்தார்.

மகான்களின் பெருமை சொல்வதற்கும் அரியதே!

– “ஸ்ரீசேஷாத்ரி ஆயிரம்” நூலில் இருந்து....

# நான் என்றால் என்ன?

சிக்கலான பல விஷயங்களுக்கு எளிமையான முறையில் தீர்வு கண்டுகொண்டிருக்கிறோம்

கடவுள் என்றால் என்ன?

மாயை என்றால் என்ன?

என்பவைகளை பற்றி அலசி ஆராய்ந்தோம். இப்படி அலசி ஆராய்கிறபோது நமக்குள் ஒரு கேள்வி இயற்கையாக எழுகிறது. ஆராய்ந்தோம், ஆராய்கிறேன் என்று கூறுகிறோமே அப்படி செய்வது யார்?

இங்கு பேசுவது நான் பேசுவதற்காக. கருத்துக் களை மனதில் ஒட்டி கொண்டிருப்பது நான். ஒருமுறை பயன்படுத்தும் வார்த்தையை மறுமுறை பயன்படுத்தாமல் புதிய வார்த்தைகளை கையாள வேண்டுமென்று கவனம் எடுத்து இருப்பது நான். இப்படி எதை எடுத்தாலும் நான் நானென்று கூறுகிறேனே அந்த நான் என்றால் யார்? நான் என்பது என்ன?

எனது சொல், எனது செயல், எனது புத்தி, எனது மனம் என்று நிறைய எனது இருக்கிறது. அவையெல்லாம் எனதே தவிர நான் அதுவல்ல பிறகு நான் என்பது உடலா? என் உடலென்று உடலையும் என்னையும் பிரித்து சொல்கிறேனே தவிர நானே உடல் அல்ல என்ற உணர்ச்சி எனக்கு தெளிவாக இருக்கிறது. உடல் நான் அல்ல எனும் போது உயிர் மட்டும் நானாகவா இருக்கப் போகிறது. அதையும் எனது உடமை போல எனது என்று தானே குறிப்பிடுகிறேன். எனவே உயிர் என்பதும் நான் அல்ல. பிறகு எது தான் நான் என்பது.

நான் என்பது உடலும் அல்ல, உயிரும் அல்ல. என்று நான் மட்டும் உணரவில்லை. நீங்களும் உணருகிறீர்கள் பகவான் கண்ணனும், இந்த உணர்ச்சியை தான் உண்மை என்று கூறுகிறான். ஆனால் உண்மையில் நான் என்பது உடலோ, மனமோ, புத்தியோ, ஆத்மாவோ அல்ல எனும் போது வேறு எதுவாகத்தான் இருக்கும் என்ற சிக்கல் நம் முன்னால் வந்து நிற்கிறது.

ஆத்மா, பரமாத்மா என்று கூறுகிறோம். ஆத்மா என்றால் நம்மை போன்ற மனித ஜீவன்கள் மற்ற உயிர்வகைகள் என்பது தெரியும். பரமாத்மா என்றால் கடவுள் என்பதும் நமக்கு தெரியும். அதனால் தான் உயிர்களை ஜீவாத்மா என்று அழைத்தோம். உண்மையில் நாம் என்பது, ஆத்மாவும் அல்ல என்றாலும் மிக நுணுக்கமான முறையில் ஆழ்ந்து சிந்திக்கும் போது ஆத்மாவின் இருப்பு நிலை தான், நான் என்பது என்று உணர முடிகிறது.

அதன்படி பார்த்தால் மனிதனது உண்மையான உருவம், உண்மையான இயல்பு, உண்மையான நான் ஆத்மா தான் என்ற முடிவிற்கு வேறு வழி யில்லாமல் வரவேண்டிய நிலையில் இருக்கிறோம். காரணம் நமது அறிவு என்பது பூரணம் நிறைந்தது அல்ல. அதற்கு ஒரு எல்லை இருக்கிறது. அந்த எல்லையை மீறி நம்மால் சிந்திக்க இயலாது. ஆயிரம் தான் எனது ஆத்மா என்று கூறும் போது நாமும், ஆத்மாவும் வேறு வேறான தாத்பர்யம் தெரிந்தாலும் கூட அதையும் தாண்டி சிந்திக்கும் ஆற்றல் நமக்கு இல்லை என்பதனால் ஆத்மாவின் உணர்ச்சியே நான் என்ற முடிவிற்கு வரவேண்டிய நிலையில் இருக்கிறோம். இது குழப்பமான விஷயம் தான். ஆரம்பத்தில் குழப்பமாகத்தான் தெரியும். ஆனால் உணர்ச்சி குதிரையை உள் முகமாக தட்டி விட்டு பயணப்பட்டால் சரியான கருத்து என்பதாகத்தான் தோன்றும்.

இந்த கருத்தை நம்புகிறவன் இது தான் உண்மை என்று விடாப்பிடியாக பற்றி கொள்கிறவனுக்கு, விசாலமான இன்பம் இருக்கிறது. இந்த கருத்தின்படி ஆத்மாவை தான் என்று கருதுபவன் எல்லா உயிர்களிலும் தன்னைப்போலவே ஆத்மா இருப்பதை காண்கிறான். கைகளுக்குள் அடங்கி விடும். சின்னஞ்சிறிய சிட்டு குருவியும் ஆறடி அகலத்தில் பருத்து கிடக்கும் பருந்தும் தன்னைப் போலவே ஒரு ஆத்மாவென்று கருதுகிறான். ஓயாது அலையடித்து கொண்டே இருக்கும் நீலநிற கடலும், ஓங்கி உயர்ந்து வானத்தை முத்தமிடுவது போலிருக்கும் மலையும், மலைமுகடும் பார்க்குமிடம் எங்கும் பசுமையாக பரந்திருக்கும் புல்வெளியும், அதில் ஊர்ந்து செல்லும் சின்னப்புழுவும் தானே தன்னை போன்ற ஆத்மாவை என்று ஆனந்த களிப்படைகிறான்.

மேலும் உலகிலுள்ள அனைத்து ஆன்மாக்களும் குணத்தால் ஒன்று என்பதனால், மனிதன் தனக்கும் மற்றவைகளுக்கும் வித்தியாசம் காண வேண்டிய அவசியமே இல்லை. காரணம் அவன் அனைத்தையும் தான் என்பதாகவே பார்க்கிறான். இதை தான் மகாகவி சுப்ரமணிய பாரதி

வானில் பறக்கின்ற புல்லெல்லாம் நான்
மண்ணில் திரியும் விலங்கெல்லாம் நான்
கானிழல் வளரும் மரமெல்லாம் நான்
காற்றும் புனலும் கடலும் நான்

என்று அழகுற பாடுகிறான். எல்லா உயிர்களையும் ஒன்றாக, ஒரே தரமாக நினைக்கின்ற எவனுக்கும் ஆசை இருக்க முடியாது. ஏனென்றால் தனக்கு அந்நியமாக ஒரு பொருளுமே இல்லாத போது அடைய வேண்டியது என்று எது இருக்கிறது. அனைத்தையும் தன்னைப்போல உணருகிற எவனுக்கும் பயம் என்பது எள்முனை அளவு கூட இருக்க வாய்ப்பில்லை. நமக்கு அந்நியமாக இன்னொன்று இருப்பதாக இருந்தால் தானே அதை பார்த்து அச்சம் வரும். எல்லாமே நாம் என்கிற போது. எதைபார்த்து பயப்படுவது.

தனது ஆத்மா தான், மற்றவைகளாக இருக்கிறது என்று நம்புகிறவன் எவனுக்கும் கோபம் மோகம் வரவே வராது. நாம் வெறுக்க வேண்டிய அல்லது நேசிக்க வேண்டிய பொருளென்று தனித்து ஏதாவது இருந்தால் தானே இவைகள் வரும். என் மீதே நான் கோபம் கொள்ள முடியுமா? என்னையே நான் மோகிக்க முடியுமா? எல்லாமே ஒரே ஆன்மா என்று கருதுகிற போது துக்கம் மறைகிறது.

துயரம் காணாமல் போகிறது. முழு மகிழ்ச்சியோடு இருக்கிறோம். ஏனென்றால் நமக்கு கவலை தருகின்ற அம்சமென்று உலகில் எதுவுமே கிடையாது. இப்படிப்பட்ட மனிதனுக்கு ஈடுயினை என்ன இருக்கிறது. இப்படி ஒருவன் இருந்துவிட்டால் அவனே சர்வ சக்தி கொண்ட கடவுள். அவனே சகலத்தையும் செய்து முடிக்கும் ஆற்றல் கொண்ட பரப்பிரம்மம். இது தான் ஒரு மனிதனின், ஒரு ஆத்மாவின் நாம் என்பதின் உண்மை லட்சணம். உண்மை சொரூபம் என்று இந்துமத சாஸ்திரங்கள் கூறுகிறது. ஆனால் நடைமுறையில் இந்த நிலையை நாம் பார்க்கிறோமா? இப்படிதான் வாழ்கிறோமா? என்பதை சிந்திக்க வேண்டும்.

நமது உடலையும், மனசாட்சியையும் வேறு வேறாக பிரியுங்கள். இரண்டையும் நீதிமன்ற கூண்டில் ஏறி நிற்க விடுங்கள். ஒன்றை ஒன்று பார்த்து உண்மையான கேள்விகளை கேட்கவையுங்கள். நிச்சயமாக சர்வ நிச்சயமாக நமது ஆத்மாவை உலகம் தழுவியதாக காணும் பொருள் ஒவ்வொன்றும் நாமாக நமக்கு அந்நியம் இல்லாததாக கருதுகிறோமா? அப்படி ஒரு எண்ணம் நம் மனதில் மூலை முடுக்கில் எங்கேயாவது கிஞ் சித்தேனும் மறைந்திருக்கிறதா? என்று கேள்விகள் கேட்டோமென்றால் சத்தியத்திற்கு புறம்பாக ஆமாம் என்ற பதிலை நம்மால் கூற இயலாது.



குழந்தையாக, சிறுவனாக, இளைஞனாக, முதியவனாக கணந்தோறும் மாறிக்கொண்டிருக் கின்ற, அழியப் போகின்ற உடலையே உடலை மட்டுமே நாம் நாமாக நினைத்து கொண்டிருக்கின்றோம். நம்மால் உடலை தவிர்த்து வேறு எதையும் நினைக்க முடியவில்லை. பாமரர்களாகிய நாம், நான் என்பது ஆத்மா அல்ல. உடம்பே என்று உறுதியாக நம்புகிறோம். இது இல்லை என்று நம்மால் மறுக்க இயலாது. அப்படி மறுத்தால் நமக்கு நாமே பள்ளம் பறித்து கொள்வதில் வல்லவர்களாக இருப்போம் என்பதே சரியானதாகும்.

மனமும், அந்த மனம் ஆழ்ந்து கூர்மை யாக செல்லும் போது உருவாகும் அறிவும், உடலில் உள்ள ஒரு பகுதியே ஆகுமென்று நமது இந்து மதம் அசைக்க முடியாத நம்பிக்கையை கொண்டிருக்கிறது.. ஆனால் மற்ற வர்கள் மனதிற்கும், அறிவிற்கும் முக்கியத்துவம் தருகிறார்கள் விஞ்ஞானமும் மருத்துவமும் வேறு சில மெய்ஞானிகளும் இப்படியே தான் கருதுகிறார்கள். நம் மதம் மனதையும், அறிவையும் உட லோடு சம்மந்தபடுத்துவது ஏன் என்று கேள்வி நமக்கு வரலாம்.

உடல் என்பது அழியக்கூடியது, மாறக்கூடியது ஒரு சமயத்தில் ஒன்றாகவும், வேறொரு சமயத்தில் வேறொன்றாகவும் இருக்க கூடியது. மனமும் புத்தியும் அப்படித்தான் மாறிக் கொண்டே இருப்பது மாறுகின்ற இயல்புடைய எதுவும் நிரந்தரமாகாது. ஆனால் ஆத்மா என்பது நான் என்பது மாறாதது நிலைபிரளாதது

உடல் அழியக்கூடியது என்பத னால் அதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லையா? அதன் தேவைகளை கவனிக்க வேண் டிய நிர்பந்தம் கிடையாதா? என்றால் நிச்சயமாக ஆத்மாவை போல உடலும் கவனிக்கப்பட வேண்டிய ஒரு வஸ்துவே ஆகும்.

உடலை அலட்சியபடுத்தினால், உடலை சார்ந்திருக்கின்ற ஆத்மாவும் அலட்சியப்படுத்தபட்டதாகும். மலர் இல்லாமல் வாசனை இல்லை. நிலவு இல்லாமல் குளிர்ச்சி இல் லை. உடல் இல்லாமல் ஆத்மா என்ற உணர்ச்சி இல்லை.

எனவே தான் திருமூலர் உடலை வளர்ப்பதும், உயிரை வளர்ப்பதும் இறைவனுக்கான செயலே என்றார். ஆத்மாவை வளர்க்க, ஆத்மாவை இறைவனது பாதங்களில் கொண்டு சேர்க்க, உடல் என்பது ஒரு தெப்பமாக பயன்படுகிறது. எனவே உடலை அலட்சியபடுத்த வேண்டிய அவசியமில்லை. அதே நேரம் உடல்தான் பிரதானம் என்ற உணர்வும் தேவையற்றது.

ஒரு குடும்பத்தில் தாய், தகப்பன், அண்ணன், தம்பி, அக்கா, தங்கை, மனைவி குழந்தைகள் இருப்பது போல ஆத்மா என்ற ஒன்று நிலைப் பதற்கு மனம், புத்தி, உடம்பு என்ற மற்ற உறுப்பு கள் தேவைப்படுகிறது. நானும், என் மகனும் ஒரே இரத்தம் என்றாலும் நானும், அவனும் ஒன்றாகி விடுவோமா? அவன் உணர்வுகள் வேறு. என் உணர்வுகள் வேறு. அதே போலதான் ஆத்மாவும், உடம்பும் தெரிந்தோ தெரியாமலோ ஆத்மாவின் ஒரு அங்கமாக உடம்பு வந்துவிட்டது. அதனால் உடம்பை பற்றிய துயரங்களும், ஆத்மாவை தொடர்கிறது. உடலுக்கு வருகின்ற துயரங்களை ஆத்மா தனக்கு வந்ததாக கருதி வீணாக மயக்க மடைகிறது. இது தான் மாயை என்ற பம்பர கயிறு ஆத்மாவை ஆட்டி வைக்கிறது என்று முன்பே சொன்னேன்.

**“ உடல் என்பது அழியக்கூடியது, மாறக்கூடியது ஒரு சமயத்தில் ஒன்றாகவும், வேறொரு சமயத்தில் வேறொன்றாகவும் இருக்க கூடியது. மனமும் புத்தியும் அப்படித்தான் மாறிக் கொண்டே இருப்பது மாறுகின்ற இயல்புடைய எதுவும் நிரந்தரமாகாது. ஆனால் ஆத்மா என்பது நான் என்பது மாறாதது நிலைபிரளாதது ”**

இப்போது நீங்கள் ஒரு முடி வுக்கு வந்திருப்பீர்கள். ஆத்மா, மாயை, மனம், புத்தி, உடம்பு இவையெல்லாமே ஆண்டவனின் அம்சங்கள். எதிலிருந்தும் எதை யும் பிரிக்க முடியாது என்ற முடிவிற்கு வந்திருப்பீர்கள். நான் என்பது ஆத்மா மட்டுமே என்று கூறி மனதையும், புத்தியையும், உடம்பையும் உதாசீனப்படுதினால் கிடைக்க கூடிய லாபமென்று எதுவுமே இல்லை. ஆத்மா வேறு.

உடல் வேறு என்றால் இறந்து போன அன்னையின் உடலை வைத்து கொண்டு ஆத்ம பக்கு வம் பெற்ற பட்டினத்தாரும், ஆதி சங்கரரும் அழுது புலம்பியது ஏன்? இறந்தது உடல் மட்டும் தான். ஆத்மா அல்ல என்று அவர்கள் மகிழ்ந்திருக்கலாமே அன்னையின் மென்னுடல் விறகில் கிடந்தது அவதியடையக் கூடாது என்று வாழை மட்டையை வைத்து பட்டினத்தார் சிதை மூட்டினாரே அவருக்கு ஆத்ம பரிபக்குவம் இல்லையா என்ன?

எனவே கொள்கைக்காகவோ, தத்துவங்களுக்காகவோ நான் என்பது ஆத்மாவே தான் என்று அடித்து கூறினா லும், உண்மையில் இந்து மத கொள்கைபடியும், யதார்த்தமான நடைமுறைபடியும் நான் என்பது ஆத்மாவையும், உடலையும் இணைத்து காட்டும் ஒரு குறியீடு தான் என்பதை மறுக்க முடியாது. இந்த கண்ணோட்டத்தோடு பார்த்தால், சாதாரண மனிதனின் நடத்தைக்கும், ஞானிகளின் நடத்தை யிலும் உள்ள வித்தியாசம் மிக தெளிவாக தெரிந்துவிடும். சாதாரண மனிதன் இறுதி வரை உடம்பு தான் ஆத்மாவென்று துன்பத்தில் கிடந்து சாகிறான். அதனால் உடல் அடைகிற துன்ப மெல்லாம் நிஜமென்று கருதி வெந்து மாய்கிறான்.

ஞானி தெளிவடைந்து இருக்கிறான். அவனுக்கு ஆத்மாவையும் தெரியும். உடலையும் தெரியும். தீயினால் உடம்பு சுடப்பட்டால் வலியால் துடிக்கும் ஞானி, இந்த வலி சரீரத்திற்கே தவிர, ஆத்மாவுக்கு அல்ல. ஆத்மா என்பது எப்போதுமே ஊனப்படாது என்று தெளிவாக தெரிந்து வைத்திருக்கிறான். இதனால் ஞானியின் துயரம் சில நிமிடங்களில் கற்பூரம் போல மறைந்து போகிறது. சாதாரண மனிதனின் துயரம் தான் நீண்டுகொண்டே இருக்கிறது. அதனால் தான் முன்னோர்கள் சொன்னார்கள். உன்னையே நீ அறிந்து கொள் என்று. உன்னை நீ அறிந்து கொண்டால், நீ யார் என்பதை தெரிந்து கொண்டால் உனக்கு என்றுமே துன்பமில்லை.




உன்னை நீ அறிந்துகொள்ள உனக்கு அரிதாரம் பூசாதே. நான் இந்த இனத்தை சேர்ந்தவன். நான் இந்த மதத்தை சேர்ந்தவன். நான் இந்த மொழியை பேசுகிறவன் என்று உனக்குள் வட்டத்தை போட்டு கொண்டிருந்தால் உன்னை அறிய உன்னால் ஒருபோதும் முடியாது. வட்டத்தை விட்டு வெளியே வா கருத்தளவில் உன்னை பிணைத்திருக்கும் விலங்குகளை உடைத்து போடு. கொள்கைகள், கோட்பாடுகள், தத்துவங்கள் எதுவும் உன்னை சிறைப்படுத்தாமல் பார்த்து கொள். தண்ணீரில் விழுந்த மாம்பழம் எப்படி சுத்தமாக மாறிவிடுமோ அப்படி உன்னை ஸ்படிகம் போல் ஆக்கி கொள். அப்போது உன்னை பற்றி சிந்தி. உனக்குள் இருக்கும் நீ தெளிவாக தெரிவாய்.

உன்னை நீ அறிந்து கொண்டால், உன்னை நீ புரிந்து கொண்டால் துயரம் என்பது சமுத்திரத்தின் அலை கள் உன் காலைத்தொட்டு போவது போல் உடனடியாக போய்விடும். தோல்வி கள் என்பது உன்னை பிணைத்து போடாது. எதற்கும் கட்டுப் படாத வட்ட நிலா போல வானத் தில் பவனி வரலாம். நீயும் வெளிச்சமாக இருந்து பிறருக்கும் வெளிச்சத்தை காட்டலாம். உன்னை அறிந்து கொள்ளுகின்ற இயல்பை நீ அடைந்து விட்டால் கடவுளையும் சுலபமாக அறிந்து கொள்ள லாம். கடவுளை நீ அறிந்த பிறகு வேறு என்ன அறிவ தற்கு இருக்கிறது?

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 9442426434

# ருத்திராட்ச வரலாறு



தாரகாஷன், வித்யுன்மாலி, கமராஷன் என்னும் மூன்று அசுரர்கள் சிவபெருமானை வேண்டி, கடுமையான தவம் புரிந்தனர். தவத்தில் மனம்குளிர்ந்த இறைவன் தங்கம், வெள்ளி மற்றும் இரும்பால் ஆன மூன்று கோபுரங்களைத் தந்தருளினார். இந்தக் கோபுரங்களின் மூலமாகப் பறந்து செல்லும் சக்தியும், பல்வேறு ஆயுதங்களைப் பயன்படுத்தும் ஆற்றலும் அசுரர்களுக்குக் கிட்டியது.

இதனால் அசுரர் மூவருக்கும் ஆணவம் தலைக்கேறியது. மூவுலகத்தையும் வென்று தேவர்களையும் துன்பப்படுத்தினர். அசுரர்களின் கொடுமைகளைப் பொறுக்க முடியாமல் தேவர்கள் சிவபெருமானிடம் சென்று முறையிட்டனர். சிவபெருமானும் அசுரர்களை அழித்துக் காப்பாற்றுவதாக உறுதி அளித்தார்.

தேவர்களுக்குச் செய்துகொடுத்த சத்தியத்தைக் காப்பதற்காக, சிவபெருமான் தன்னால் வரம் அருளப்பட்ட அசுரர் மூவரையும் தன் நெற்றிக்கண்ணால் அழித்தார்.

அந்நேரத்தில் அவர் மனம் இளகி அவரது கண்ணிலிருந்து கண்ணீர் கொட்டியது. அந்தக் கண்ணீரே ‘ருத்திராட்சம்‘ ஆனது.

– மேலும் ருத்திராட்சம் பற்றி அறிய
35ம் பக்கம் பார்க்க

# "ஆ(ம)ஹா பாரதம்"

பாகம் 10

டுண்டுப ரிஷியிடம் ருரு ஆஸ்திகனின் கதையை கேட்க விரும்பினார்.

அவரோ "ருரு! ஆஸ்திகனின் கதையை ஒரு பிராம்மணர் மூலம் கேட்டுத் தெரிந்துக் கொள்" என்று கூறி மறைந்து விட்டார்.

அவரைத் தேடி காட்டிற்குள் அலைந்தவன் அவரைக் காணாமல் மூர்ச்சையாகிப் போனான்.பின் வீட்டிற்கு நடந்த விஷயங்களை தன் தந்தையிடம் சொல்ல அவர் ஆஸ்தீகன் கதையைக் கூறினார்.

முன்பு சூதரிடம் செனகர் கேட்க சூதர் சொன்னதாக கதை விரிகிறது.

ஆஸ்தீகனின் தந்தைப் பெயர் ஜரத்காரு. ஆகாரக் கட்டுபாடு உடையபிரும்மச்சாரி. எப்போதும் உக்ரமான தவத்திலிருப்பவர். தர்மமறிந்த ரிஷி. எப்போதும் சஞ் சரித்துக் கொண்டே இருப்பவர். மாலை வேளைகளில் எங்காவது முகாமிடுவார்.

ஒரு சமயம் ஒரு இடத்தில் அது போல் முகாமிட்டு தீர்த்தத்தில் நீராடி விரதத்தில் ஈடுபட்டிருந்தார். உணவாக காற்றையே உட்கொண்டு இரவில் உறக்கமில்லாமல் இருப்பது வழக்கம். அச்சமயங்களில் சிறிது உலவுவார். ஒரு முறை அது போல உலா வரும் போது ஒரு பள்ளத்தில் தன் முன்னோர்கள் தலை கீழாக தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டார்.



அவர்களிடம் "நீங்கள் யார்? எதற்காகத் தலைக் கீழாக இந்தப் பள்ளத்தில் தொங்கிக் கொண்டிருக்கிறீர்கள்?அதிலும் நீங்கள் எந்தப் புல்லைப் பற்றிக் கொண்டு தொங்குகிறீர்களோ அதை இந்தப் பள்ளத்திலுள்ள எலிகள் சாப்பிட்டுக் கொண்டிருக்கின்றன" என்றார்.

அதற்கு பித்ருக்கள் "நாங்கள் கடுமையான விரதங்களை அனுஷ்டிக்கும் பிராம்மணர்கள். எங்கள் சந்தான பரம்பரை அழிவதால் நாங்கள் பூமியில் விழ இருக்கிறோம். எங்களுடைய வாரிசு ஒன்று தப்பியுள்ளது. அவன் பெயர் ஜரத்காரு. அந்த மூடன் திருமணம் செய்துக் கொள்ளாமல் எப்போதும் தவத்திலேயே ஆழ்ந்திருப்பதால் எங்கள் வம்ச பரம்பரை அழிகிறது. அதனால் எங்களுக்கு இந்த நிலை ஏற்பட்டது" என்றனர்.

எங்களைக் காப்பாற்ற ஒருவன் இருந்தும் பாவம் செய்தவரைப் போல நாங்கள் அனாதையாகி விட்டோம். அது போகட்டும். எங்கள் நிலையைக் கண்டு வேதனைப்படும் நீ யார்? என்று கேட்டதும் "மகாத்மாக்களே ! நீங்கள் என்னுடைய முன்னோர்களும், பித்ருக்களும் ஆவீர்கள். ஜரத்காருவாகிய நான் உங்களுக்காக என்ன செய்ய வேண்டும்? என்பதைக் கூறுங்கள் என்றார் ஜரத்காரு.

"பிரபோ! மகனையுடையவன் உலகில் அடையும் உத்தம கதியை, மற்ற தர்மங்களின் பலனாலும், சேர்த்து வைத்த தவத்தாலும் பெறவே முடியாது.



எனவே நீ எங்கள் பரம்பரையின் வாரிசை உருவாக்க திருமணத்திற்கு முயல வேண்டும். வாரிசை தோற்றுவிக்க வேண்டும். இதுவே எங்களை உய்விக்கும் உத்தம காரியமாகும்.

பித்ருக்களே! வாழ்வில் சுகபோகத்திற்காக மனைவியையும், செல்வத்தையும் ஏற்பதில்லை என்று தீர்மானித்திருந்தேன் ஆனால் நீங்கள் கூறுவதே நன்மையென்றால் நான் அப்படியே செய்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனை.

என் பெயரே கொண்டவளை, அவளது உறவினர்கள் தானே வந்து எனக்கு விருப்பத்தோடு பிக்ஷையைப் போல் தானமாக கொடுப்பவளையே சாஸ்திர முறைப்படி திருமணம் செய்துக் கொள்வேன்.

இந்த விதிப்படித்தான் திருமணத்தை செய்ய முயற்சி செய்வேன். இதற்கு எதிராக எதையும் செய்ய மாட்டேன். இதன்படி அமையும் மனைவி மூலம் பிறப்பவன் உங்களை உத்தாரம் செய்வான். ஆகவே நீங்கள் உங்கள் பழமையான இடத்திற்குச் சென்று அங்கு சந்தோஷமாக இருங்கள்.

அடுத்த இதழில்....

- Thali,
Ph:09786223577

## யார் யார் எந்த காலத்தில் ருத்திராட்சம் அணியலாம்?



ஆண், பெண் பேதமின்றி யாரும் அணியலாம். வயது வரம்பும் கிடையாது. ஆனால், ருத்திராட்சம் அணிந்தால் சில நடைமுறைகளை, பழக்கவழக்கங்களை நாம் பின்பற்ற வேண்டும்.

ருத்திராட்சம் அணியவேண்டிய காலங்கள்:

கடவுளுக்குப் பூஜை செய்யும்போது அணியலாம். பிறருக்கு கல்வி அளிக்கும்போது அணியலாம். புனித நதிகளில் குளிக்கும்போது, பிதுர் தர்ப்பணம் செய்யும்போது, வீட்டில் நடைபெறும் சுப நிகழ்வுகளின்போது அணியலாம். எந்தவொரு செயலையும் ருத்திராட்சம் அணிந்து செய்யும் போது நமக்கு இறைவனின் அனுகூலம் கிடைப்பதால், நிச்சயம் வெற்றி கிட்டும்.

– மேலும் ருத்திராட்சம் பற்றி அறிய 39ம் பக்கம் பார்க்க



# மட்டைத் தேங்காய் காணிக்கை பெறும் பெருமாள்





திருச்சி மாவட்டத்தில் பச்சப்பெருமாள்பட்டியில் அமைந்துள்ள ஸ்ரீ பூமி நீளா தேவி சமேத ஸ்ரீ சுந்தராஜ பெருமாள் கோவிலில் சிறப்பு வேண்டுதலாக மட்டைத் தேங்காய் படைக்கும் வழக்கம் நிலவி வருகிறது. சுமார் 400 ஆண்டுகள் பழமையான இத்திருக்கோயில் விளங்குகிறது.

இத்திருக்கோயிலில் வீற்றிருக்கும் பெருமாளுக்கு மூலவர் பெயர் ஸ்ரீ பூமி நீளா தேவி சமேத ஸ்ரீ சுந்தராஜ பெருமாள், உற்சவர் பெயர்: ஸ்ரீ சுந்தராஜ பெருமாள் அழகிய தோட்டரம் உடையவர்.

பெருமாள் கோவிலாக இருந்தாலும் இத்தலத்து விருட்சம் வில்வமரமாக திகழ்வது சிறப்பு. மேலும் இத்தலத்தில் உள்ள வில்வ மரத்தை தொடர்ந்து ஒரு மண்டலம் வழிபட்டால் லட்சுமிகடாட்சம் கிடைப்பதுடன், தீராத கடன் தொல்லை எளிதாக தீருவதுடன், திருமணத் தடை இருந்தால் வில்வமர வழிபாடு அத் தடையை தீர்ப்பதாக கூறப்படுகிறது.

இத்தலத்து தீர்த்தத்தை அருந்தினால் சரும நோய்கள் அனைத்தும் விரைவாக தீர்ந்துவிடும் சக்தி படைத்ததாக உள்ளது.

இத்திருக்கோயிலில் வீற்றிருக்கும் பெருமாளுக்கு, எள்ளு சாதம், வடை, பால் பாயசம். போன்றவை நைவேத்தியமாக படைக்கப்படுகிறது.

400 வருடம் பழமை வாய்ந்த இக் கோவில், பிரதி சனிக்கிழமை தோறும் “திருக்கோடி” ஏற்றப்படும். (வேண்டும் வரத்தை அளிக்கக்குடியது)

இத்திருக்கோயில்களில் ஸ்ரீ சக்ரத்தாழ்வார், ஸ்ரீ அபயாஹஸ்தா ஆஞ்சநேயர், ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்மர், ஸ்ரீ லக்ஷ்மி வராஹர், ஸ்ரீ லக்ஷ்மி ஹயாகிரிவர், ஸ்ரீ தன்வந்திரி ஆகியோர் வீற்றிருக்கின்றனர்.

பிரதி மாதம் “பௌர்ணமி” தினத்தில் ஸ்ரீ சத்திய நாராயணர் பூஜை மாலை 6.00 மணிக்கு நடைபெறும் இப்பூஜையில் கலந்து கொண்டால், எண்ணி காரியம் சித்திக்கும், குழந்தை பாக்கியம் கிடைக்கும், வேலை வாய்ப்பு கிடைக்கும், கணவன் மனைவி ஒற்றுமை வளரும்.

இத்திருக்கோயிலின் சிறப்புகளில் அதி முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குவது மட்டைத் தேங்காய் நேர்த்திக்கடன் ஆகும்.

பெருமாளிடம் ஏதேனும் வேண்டுதல் வைத்து அந்த வேண்டுதல் பலித்ததும், பெருமாளுக்கு மட்டைத் தேங்காயை பூஜை செய்து காணிக்கையாக செலுத்தும் வழக்கம் கடைப்பிடிக்கப்படுகிறது.

பிரதி மாதம் “திருவோணம்” தினத்தில் ஸ்ரீ பூமி நீளா தேவி சமேத ஸ்ரீ சுந்தராஜ பெருமாளுக்கு, 1008 நாமாவளிகள் துளசியால் அர்ச்சனை செய்து பிரசாதம் வழக்கபடுகிறது.

பக்தர்களின் கடன் பிரச்சனை தீருவதற்காக “தை” மாதம் “ஆடி” மாதம் வெள்ளி கிழமை தோறும் “ஸ்ரீ லக்ஷ்மி கடாக்ஷம் பெற” சிறப்பு விளக்கு பூஜை நடைபெறுகிறது.

அதேப்போன்று பக்தர்கள் நினைத்த காரியம் நிறைவேற வேண்டும் என்றால், “கார்த்திகை” மாதம் ஞாயிறு கிழமை தோறும் 1008 முறை ஸ்ரீ சக்கரத்தாழ்வார் (சுதர்சனர்) சுற்றி வந்தால் நினைத்த காரியம் கைகூடுவதாக கூறப்படுகிறது. மேலும் கார்த்திகை மாதத்தில் ஸ்ரீ பூமி நீளா தேவி சமேத ஸ்ரீ சுந்தராஜ பெருமாளுக்கு 1008 தீபம் (சஹேஸ்ரா தீபம் ) சேவை நடை பெறுகிறது.

ஒவ்வொரு மாதமும் “அமாவாசை”, மூலாநட்சதிரம் தினத்தில் ஸ்ரீ அபயாஹஸ்தா ஆஞ்சநேயர்க்கு திருமஞ்சனம், சிறப்பு அலங்கார சேவை நடைபெறுகிறது.

பிரதோஷ தினத்தில் இத்தலத்தில் வீற்றிருக்கும் பெருமாளுக்கு “குங்குமா அர்ச்சனை, பானகம்



செய்து வழிபட்டால், அனைத்து துயரம் நீங்கும், மேலும் செவ்வாய் தோஷம், கடன் தொல்லை அகலும் என்பதால் தொன்று தொட்டு பிரதோஷ வேளையில் சிறப்பு பூஜைகள் நடைபெறுகிறது.

இக்கோவிலின் சிறப்பு பூஜையான “சத்தியநாராயண பூஜையில் “நினைத்த காரியம் நிறை பெற்றதும் மட்டை தேங்காய் பெருமாளிடம் வைத்து விட்டு, பூஜைக்கு மற்றும் கோவில்க்கு உபயம் செய்கிறார்கள்.

பிராத்தனை விரைவில் நிவர்த்தி பெற சனி கிழமை தோறும் “எள்ளுசாதம்” நைவேத்யமாக படைக்கின்றனர்.

இத்திருக்கோயில் தொலைபேசி முகவரி: 04327233530 செல் 9442084316, 8903401310.

# ஒரு கையில் கடவுள், மறு கையில் கடமை!

ஒரு சிலர் பக்தி, கோயில், பூஜை என்று இருந்தால் வாழ்க்கை சிறக்கும் என்று சொல்கிறார்கள். ஆனால் இன்னும் சிலர் “சாமியாவது, பூதமாவது, நடக்குறதுதான் நடக்கும் என்கிறார்கள்” இதில் எது சரி என்பது பல சமயங்களில் நமக்கு பல்வேறு குழப்பத்தை ஏற்படுத்துகிறது.

இந்த குழப்பத்திற்கு விடையை ஆதிசங்கரர் கூறியுள்ளார்.

ஒருமுறை ஸ்ரீ ஆதிசங்கரர், ஒரு கிராமத்தின் வழியே போய்க் கொண்டிருந்தபோது, அவரைக் கண்ட ஏழை விவசாயி ஒருவன். மேற்கண்ட குழப்பத்திற்கு விடையைக் கேட்டான்.

ஆதிசங்கரர் அவனிடம், “மகனே, இதோ இங்கிருக்கும் ஓடையைக் கடந்துப் போக உதவி செய். நான் உனக்கு பதில் அளிக்கிறேன்!” என்றார்.

அவன் அந்த ஓடையின் குறுக்கே போடப்பட்டிருந்த ஒற்றை பனைமரத்துண்டு பாலத்தின் மீது ஏறி பக்கத்திலிருந்த ஒரு மூங்கில் கழியை பிடித்தபடி நடந்தான். சங்கரரும் அந்தக் குச்சியைப் பிடித்தபடி பாலத்தைக் கடந்தார். அக்கரையில் இறங்கியதும் நன்றி தெரிவித்தார்.

அதற்கு அவன், “எனக்கு எதுக்கு நன்றி? நீங்கள் ஓடையைக் கடந்ததற்கு இந்த மர பாலத்துக்கல்லவா நன்றி சொல்லனும்?” என்றான்.

“ஓகோ! அக்கரையிலிருந்து இக்கரைக்குக் கொண்டு வந்துவிட்டது இந்தப் பாலம் தானா? அப்படி என்றால் அந்த மூங்கில் குச்சியை எதற்காக பக்கத்தில் கட்டி வச்சிருக்காங்க?”

“மரப் பாலத்தை கடக்கிறபோது, திடீரேன்னு வழுக்கி விழுந்தால், பிடிச்சுக் கத்தான் சுவாமி!”

“உன் கேள்விக்கும் அதுதான்பா விடை! அவனவன் தன் உழைப்பு என்கிற பாலத்தின் மீது நடந்து வந்தால்தான், பத்திரமான இடத்தை அடையமுடியும். ஏதாவது எசகுபிசகா தவறி நடந்தால், அந்த குச்சியை பிடிச்சுக்கிற மாதிரி, ஆண்டவனின் திருவடியைப் பற்றிக் கொள்ளணும்!” என்றார் ஆதிசங்கரார்.

ஒரு கையில் கடவுள், மறு கையில் கடமை! இப்படி இருப்பவர்கள் கெட்டதாக சரித்திரம் இல்லை.

நாம் வழிபடவும், வேண்டிய வரங்களை எல்லாம் தரவும் மட்டுமில்லை கடவுள்; நாம் துக்கப்படும்போது சொல்லி ஆறுதல் தேடவும் அவர் வேண்டும். எனவே தான் “கல்லோடு ஆயினும் சொல்லி அழு” என முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள்.







# ருத்திராட்சம் பற்றிய சுவையான தகவல்கள்

## ருத்திராட்சம் அணியும் முன்பாக பின்பற்ற வேண்டிய நடைமுறை:

ஒருவார காலம் பசு நெய் அல்லது நல்லெண்ணெயில் ருத்திராட்சத்தை ஊறவைக்கவேண்டும்.

பின்னர் நீரால் சுத்தப்படுத்தி, ஈரம் காய்ந்த பின்னர் திருநீறில் ஒருநாள் முழுவதும் வைத்திருக்கவேண்டும்.

அடுத்ததாக, பச்சைப் பசும்பாலில் கழுவ வேண்டும், பின்பு மீண்டும் நீரால் தூய்மை படுத்த வேண்டும்.

தூய்மையான ருத்திராட்சத்தை பூஜை செய்து, மந்திரம் ஜபித்து அணியவேண்டும்.

## ருத்திராட்சம் அணிவதால், உண்டாகும் பொதுவான நன்மைகள்:

புண்ணிய நதிகளில் நீராடிய நன்மை கிட்டும்.
தீய சக்திகளிலிருந்து நம்மைக் காப்பாற்றும்.
மோட்சத்தை அருளும் சக்தியை வழங்கும்.
லட்சுமி கடாட்சம் கிட்டும்.
புத்திரப் பாக்கியம் உண்டாகும்.

ருத்திராட்சத்தைப் பார்ப்பது மகா புண்ணியம். தொட்டால் கோடி புண்ணியம். அணிந்துகொண்டால் பல கோடி புண்ணியமாகும்.

நம் உடல் பிணிகளைப் போக்கக் கூடியது.

108 ருத்திராட்சம் கொண்ட மாலையை அணிந்தால், ‘அசுவமேத யாகம்‘ செய்த புண்ணியம் உண்டாகும். பாவங்களிலிருந்து விடுதலை கிட்டும்.

ஒன்று முதல் பதினான்கு முகங்கள் கொண்ட ருத்திராட்சம் உண்டு. ருத்திராட்சங்களின் முகங்களைப் பொறுத்து நமக்கு கிடைக்கும் நன்மைகளும் மாறுபடும்.

பெரும்பாலும், இருமுகம், ஐந்துமுகம், 11 முகம், 14 முகமே சிவனடியார்களால் போற்றப்படுகிறது. சிவனடியார்களின் அறிவுரை மற்றும் ஆசீர்வாதத்துடன்ருத்திராட்சம் அணிவது சிறப்பு.

பிறப்பு, இறப்பு போன்ற தீட்டு நாள்களில் ருத்திராட்சம் அணியக் கூடாது.

## ருத்திராட்ச மரம் தல விருட்சமாக உள்ள ஆலயங்கள்:

திருவலஞ்சுழி
அச்சுதமங்கலம்
தாராசுரம்

எத்தனை பெரிய கோடீஸ்வரர்கள் ஆனாலும், இறுதியில் வருவது ஈஸ்வரனின் திருவடிகளுக்குத்தான். ‘ருத்திராட்சம்‘ எப்போதும் நம்மை இறைவனுக்கு அருகிலிருப்பது போல் உணர வைக்கும்.



# மின்னூல் வடிவத்தில்

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்
அனைத்து பிரதிகளையும் படித்து மகிழ...

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

www.aanmeegamalar.com

MAGZTER
DIGITAL MAGAZINE STORE
TAP · READ · ENJOY

இணையதளங்களை பார்க்கவும்...

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை

உலகின் அனைத்து
மொழிகளிலும்
செய்திகளைத் தரும்

dailyhunt

மொபைல் அப்பில் உடனுக்குடன்
தெரிந்து கொள்ளலாம்.